# மேலும் 4 சடலங்கள் கரையொதுங்கின


Fegiestred as a News Papar in Ceylon விலைசதம் 15 ★ ★

ஈழநாடு

THE EELANADU

National Tamil Daily

தபால் பெட்டி எண் 49

போன்: 389

மலர் 12

இதழ்: 24

தேசிய தினசரி

யாழ்ப்பாணம் மாசி 23 ஜுல்ஹஜ் 27 வெள்ளிக்கிழமை [6-3-70]



உங்களுக்குத் தேவையான

தங்க, வைர நகைகளுக்கு

பொ. அம்பலவாணர்

தங்க, வைர நகை வியாபாரம்

119, கஸ்தூரியார் றேட்,

யாழ்ப்பாணம்.

போன்: 7119 தந்தி: வைரம்



அல்கத்தீன்

நீர் குழாய்களும்

ANTON P. V. C.

நீர் குழாய்களும்

குறைந்த விலையில் கிடைக்குமிடம்

கதிர் ஹாட்வெயர்ஸ்

11/1 ஸ்ரான்லி வீதி,

யாழ்ப்பாணம்

தொலைபேசி 7130.


## ஆண்கள்-2 பெண்கள்-2

## பாலைதீவு விபத்தில் மீண்டசடலம்-58

யாழ்ப்பாணம். வெள்ளி பாலைதீவுப் படகு விபத்தில்மாண்டவர்களில்மேலும் நான்கு பேரின் சடலங்கள் நேற்றுக் கரையொதுங்கின. இவற்றில் மூன்று சடலங்கள் குறிகாட்டுவான் துறைக்குச் சமீபமாகவும் மற்றொரு சடலம் எழுவைதீவு கடற்கரையிலும் ஒதுங்கியிருப்பதாகக் கருதப்படுகின்றது.

இவற்றுள் இரண்டு சடலங்கள் யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரி பிரேதச்சாலைக்குக் கொண்டுவரப்பட்டன. இந்த இரண்டு சடலங்களில் ஒன்று ஆண், மற்றது பெண் இதில் பெண்ணின் சடலம் அடையாளம் காணப்பட்டது

அரியாலையைச் சேர்ந்த திருமதி பூபதி இராஜதுரையின் சடலம் இது. யாழ்ப்பாண நகர திடீர்மரணவிசாரணை அதிகாரி திரு என் இராசநாயகம் மரண விசாரணை நடத்தியபின் அரியாலையைச் சேர்ந்த அந்தப் பெண்ணின் சடலம் அவரது உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

குறிகாட்டுவானில் மற்றொரு பெண்ணின் சடலம் கிடக்கிறது மிக மோசமாக அழுகிய நிலையில் அந்தச் சடலம்இருப்பதால் அது யாழ்ப்பாணத்துக்குக் கொண்டு வரப்படவில்லை நீல நிற றவுக்கை அணிந்து, கழுத்தில் தாலிக்கொடியும் கையில் இரண்டு காப்புகளுடனும் காணப்படும் இந்தச் சடலத்தை குறிகாட்டுவானில் வைத்தே அடையாளம் காணப்பட்டபின் அங்கேயே மரணவிசாரணை நடத்துவதற்கு ஒழுங்குசெய்யப்பட்டிருப்பதாகத்தெரிகிறது

### சடலம் யாருடையது?

யாழ்ப்பாணம், வெள்ளி பாலைதீவு படகு விபத்தின் பின் கண்டுபிடிக்கப்பட்டு, நேற்றுவரை யாழ்ப்பாண ஆஸ்பத்திரியில் அடையாளம்காண வைக்கப்பட்ட சடலம் ஒன்றை தேடி இதுவரை எவரும் வரவில்லை.

இன்றுவரை அடையாளம் காண படாவிடின் நாளை இச்சடலம் அரசாங்க செலவில் அடக்கம் செய்யப்படுமெனத்தெரியவருகிறது.

# இன்று இரண்டொரு படகுகள் கச்சதீவுக்கு புறப்படலாம்

## கச்சதீவிலிருந்துகடிதம்

கச்சதீவுக்கு இம்மாதம் முதல் திகதி புறப்பட்டுச் சென்ற முதல் கோஷ்டியைச் சேர்ந்த ஒருவர் அங்கிருந்து நெடுந்தீவு மார்க்கமாக அனுப்பிய ஒரு கடிதத்தில் தங்கள் கோஷ்டியைச் சேர்ந்த 15 தொண்டர்கள் ஆலயவீதிகளைச் சிரமதானமாகச் சுத்தம் செய்ததாகவும் கச்சதீவில் இலங்கைக் கடற்படைக் கப்பலான 'கஜபாகு' தங்களை வரவேற்றதாகவும் பால்குத்திய அத்தாட்சிப்பத்திரம் அங்கு வரும் ஒவ்வொருவரும் கவனமாக வைத்திருக்க வேண்டிய முக்கிய பத்திரம் என்றும் குறிப்பிட்டுள்ளார். மதுபோதை லாகிரி வஸ்துக்கள் அங்கு கொண்டுவரக் கூடாதென உத்தரவிட்டுள்ளதாகவும் அவர் தெரிவிக்கிறார்.

## ராஜாங்க அமைச்சருக்கு கண்ணீரால் வரவேற்பு

யாழ்ப்பாணம்,வெள்ளி பாலைதீவுப் படகு விபத்தினால் பாதிக்கப்பட்ட குடும்பத்தவரை நேரில் சந்தித்து அரசாங்கத்தின் சார்பிலும் தனது சார்பிலும் அனுதாபமும் தெரிவிக்க யாழ்ப்பாணத்திற்கு நேற்று முன்தினம் வந்திருந்த ராஜாங்க அமைச்சர் திரு ஜே. ஆர் வேலணைக்குச் செல்லு முன் அமைச்சர் ஜெயவர்த்தன குருநகர் இறங்குதுறைக்கு விஜயம் செய்து விபத்தில் சிக்கிய படகு சென்ற இடத்தைப்பார்வையிட்டார். இங்கு பெருந்தொகைமக்கள் குழுமியிருந்தனர்' அரசாங்க அதிபர் அமைச்சருக்கு படகுவிபத்து

## கடல் கொந்தளிப்பினல் நேற்று யாத்திரிகர் கஷ்டம்

யாழ்ப்பாணம் வெள்ளி

பாலைதீவு படகுவிபத்தைத்தொடர்ந்து ஏற்பட்டுள்ள கடற்பிரயாணக்கட்டுப்பாடுகளினல் கச்சதீவுப்பெருநாளுக்குப் போவதுகுறித்து கவலைப்பட்டுக்கொண்டிருந்த யாத்திரிகர்களில் பலர் இன்று தமது பிரயாணத்தைத் தொடங்குவதற்கு வசதியேற்படலாமென்று தெரிகின்றது.

கொழும்பிலிருந்து வந்த நிபுணரின் சிபார்சின் பேரில் நேற்று மேலும் சில படகுகளுக்கு லைசென்ஸ் வழங்கப்பட்டதாகவும் இதனல் இன்று இரண்டுமூன்று படகுகள் போவது சாத்தியமாகலாம் என்றும் தெரிகின்றது

நேற்று பிற்பகலுக்கு மேல் இரண்டு படகுகள் புறப்பட்டதாகவும் அறியப்படுகின்றது.

கச்சதீவுக்குப் போவதற்காக பல இறங்குதுறைகளுக்கும் வந்துசேர்ந்த பிரயாணிகள் படகுகள் போகாததால் நேற்று பிற்பகல்வரை ஏமாற்றத்துடன் பல இடங்களிலும் காத்துக் கிடந்தார்கள்.

நேற்று முன்தினம் குருநகர் துறையிலிருந்து இரண்டு படகுகள் கச்சதீவுக்குப் புறப்பட்டுச் சென்றன. நேற்றுப் பிற்பகல் வரை அங்கிருந்து வேறு எந்தப் படகும் புறப்பட்டுச் செல்லவில்லை.

...றும் சிலரையும் ஏற்றிக் கொண்டு நேற்று முற்பகல் 11-55க்கு அது புறப்பட்டுச் சென்றது

...சுக் கட்டித் தொங்கவிட்டு குழந்தைகளைத் தூங்கவைத்துவிட்டு, கச்சதீவில்சமைத்துச் சாப்பிடக் கொண்டுவந்த உணவுப்பொருட்களை ஊர்காவற்றுறையிலேயே சமைத்துச்சாப்பிட்டுப் பசியாறினர்.

### படகுப்பரிசோதகர்வந்தார்

படகுகளைப் பரிசோதனை செய்யும்நிபுணர் கொழும்பிலிருந்து நேற்றுவந்து சேர்ந்தார். நேற்றுப்பிற்பகலின் பின் சிலபடகுகளை அவர் பரிசோதனை செய்தார். இரவில் கச்சதீவுக்குப் பிரயாணம் செய்வதற்கு அனுமதியளிக்கப்படவில்லையாதலால் மூன்றுமணிக்குப் பின்னர் எந்தத் துறையிலிருந்தும் கச்சதீவுக்குப்படகுகள புறப்படுச்செல்ல முடியாது. அனுமதி வழங்கப்பட்டாலும் கடும் காற்றும் கடல் கொந்தளிப்புமிருப்பதால் தாங்கள புறப்படுச் செல்லத்தயாராக இல்லையென்று படகுக்காரர் பலரும் தெரிவித்தனர்.

## கடும் காற்றும் கடல்

## சுவீப் முடிவுகள்

கொழும்பு, வயாழன் இன்று மாலை இழுக்கப்பட்ட தேசிய லொத்தர் சபையின் 288-வது சுவீப்பில் பரிசுபெறும் டிக்கட்டுகள் விபரம் வருமாறு:

முதல் பரிசு

04 U 0123 ரூ.100,000

2-வதுபரிசு

16 F 0447 ரூ. 40,000

3-வது பரிசு

06 O 0023 ரூ. 10,000

தலா ரூ. 697-50 பரிசு பெறும் 100 டிக்கட்டுகள் வருமாறு:

| | |
|---|---|
| 14 J 0995 | 04 P 0411 |
| 09 M 0992 | 09 H 0638 |
| 19 o 0260 | 20 S 0414 |
| 24 L 0599 | 23 J 0056 |
| 15 U 0348 | 22 L 0984 |
| 07 Z 0168 | 43 A 0535 |
| 23 K 0688 | 33 M 0217 |
| 11 W 0742 | 37 K 0894 |
| 03 D 0328 | 21 V 0516 |
| 15 T 0343 | 30 P 0364 |
| 30 Z 0985 | 18 N 0472 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பத்தவரை நேரில் சந்தித்து அரசாங்கத்தின் சார்பிலும் தனது சார்பிலும் அனுதாபமும் தெரிவிக்க யாழ்ப்பாணத்திற்கு நேற்று முன் தினம் வந்திருந்த ராஜாங்க அமைச்சர் திரு ஜே. ஆர் ஜெயவர்த்தன வேலணைக்குச்சென்ற சமயம் அங்குமக்கள் ஐயோ எனக் குளறிய படி அவரை வரவேற்றனர். இவ் விபத்தின்மூலம் பாதிக்கப்பட்ட வேலணை மக்களை கிராமசபை அலுவலகத்தில் அமைச்சர் நேரில் சந்தித்தார். ஊர்காவற்றுறை எம் பி. திரு வ நவரத்தினம் கிளிநொச்சி எம்,பி திரு கா பொ இரத்தினம் வேலணைக் கிராமசபைத் தலைவர் திரு க. சதாசிவம் ஏனைய அங்கத்தவர்களும் அமைச்சரை வரவேற்றனர்.

அமைச்சர் இங்கு குழுமியிருந்த மக்கள் மத்தியில் அரசாங்கம் மேற்கொள்ளவிருக்கும் நிவாரண வசதிகளை எடுத்துக் கூறினார்படகு விபத்தில் தப்பியுள்ள வேலணையைச் சேர்ந்த மூன்று வாலிபர்கள் அமைச்சருக்கு அறிமுகம் செய்து வைக்கப் பட்டனர்.

திரு வ. நவரத்தினம் மக்கள் சார்பில் அரசினருக்குநன்றி தெரிவித்துப் பேசுகையில் கூடுதலான நஷ்டமடைந்துள்ள வேலணை மக்களுக்கு உதவிசெய்யவேண்டுமெனக் கேட்டுக் கொண்டார்.

வேலணைக் கிராமசபைத் தலைவர் திரு க. சதாசிவம் படகுவிபத்தில் பலியானவர்களின் குடும்ப நிலவரங்கள் பற்றிய அறிக்கையொன்றை மந்திரி ஜெயவர்த்தனவிடம் கையளித்தார்.

துறைக்கு விஜயம் செய்து விபத்தில் சிக்கிய படகு சென்ற இடத்தைப்பார்வையிட்டார். இங்கு பெருந்தொகைமக்கள் குழுமியிருந்தனர்' அரசாங்க அதிபர் அமைச்சருக்கு படகுவிபத்து சம்பந்தமான தகவல்களைத் தெரிவித்தார்.

அமைச்சர் யாழ்ப்பாணம் மாட்டின்வீதிசெட்டித்தெரு பெரியவிளான் ஆகியபகுதிகளுக்கும் சென்று பாதிக்கப்பட்ட மக்களின் குடும்பத்தவரை கண்டு அனுதாபம் தெரிவித்தார்

திரு ஜெயவர்த்தன விசேஷ விமானமூலம் நேற்று இரவு கொழும்பு திரும்பினார் அமைச்சருடன் உபசபாநாயகர் திரு,மு சிவசிதம்பரம் நல்லூர் எம்,பி டாக்டர் ஈ எம், வி நாகநாதன் ஆகியோரும் கொழும்பு சென்றனர் (வேல, மல் நி)

— —

### அராலியில்

அராலி, வெள்ளி

அராலி தறண்ன் முருகமூர்த்தி ஆலய கூட்டுப் பிரார்த்தனைச் சபையினர் இன்று சிவராத்திரி வழிபாட்டு இடைநேர நிகழ்ச்சியாக 'பூதத்தம்பி நாடகத்தையும் அராலி கலட்டி வீரபத்திரர் ஆலய பஜனை கோஷ்டியினர் திருவிளையாடல் நாடகத்தையும் செம்பிதோட்ட வைரவராலய பஜனை மன்றத்தினர் ஸ்ரீவள்ளி நாடகத்தையும் மேடைஏற்றுகின்றனர்'

# "ஈழநாடு"

## பாலைதீவு நிவாரணநிதி

இந்நிதிக்குப் பணம் அனுப்ப விரும்புபவர்கள் **'பாலைதீவு விபத்து நிவாரணநிதி', 'ஈழநாடு' யாழ்ப்பாணம்**என்ற முகவரிக்கு அனுப்பிவைக்க அன்புடன் வேண்டுகிறோம்.

### உதவி வழங்கியோர:

| | |
|---|---|
| நேற்றுவரை கிடைத்த தொகை ரூபா | 3158-00 |
| திருமதி அருணசலம் கோப்பாய் | 50-00 |
| எஸ். முரளீதரன் 138/5 நல்லூர் கந்தசுவாமி கோயில் வடக்குவீதி, யாழ். | 10-00 |
| தமிழ்க்காங்கிரஸ் அபிமானி | 25-00 |
| அபிமானி (தபாற்கட்டளை) | 3-00 |
| வே க, இராசலிங்கம் அதிபர் கனகலிங்கம் சுருட்டுத்தொழிற்சாலைவசந்தம், மானிப்பாய் | 100-00 |
| நயினதீவு ஸ்ரீ நாகபூஷனி அம் யாத்திரிகர்களின் அமுதசுரபி அன்னதானசபை தனதிகாரி மூலமாக | 15-00 |
| நோர்தன் இன்டஸ்றீஸ்ஸ்ரான்லிவீதி யாழ்ப்பாணம் | 100-00 |

இன்று இரண்டுமூன்று படகுகள் போவது சாத்தியமாகலாம் என்றும் தெரிகின்றது நேற்று பிற்பகலுக்கு மேல் இரண்டு படகுகள்

போகாத ... நேற்று பிற்பகல்வரை ஏமாற்றத்துடன் பல இடங்களிலும் காத்துக் கிடந்தார்கள்.

## கடும் காற்றும் கடல் கொந்தளிப்பும்

பாலைதீவுப் படகு விபத்தைத் தொடர்ந்து 'லைசென்ஸ்' பெறாத படகுகள் எதுவும் கச்சதீவுக்கு பிரயாணிகளையோ, பொருள்களையோ ஏற்றிச் செல்ல அனுமதிக்கப்படமாட்டாது என்று அரசாங்கம் அறிவித்ததைத் தொடர்ந்து லைசென்ஸ் உள்ள இரண்டொரு படகுகளே இதுவரை கச்சதீவுக்குப் பிரயாணிகளுடன் சென்றிருக்கின்றன. நேற்றுக் காலை ஊர்காவற்றுறைத் துறையிலிருந்து கச்சதீவுக்குப் புறப்பட்டுச் சென்ற மகாலட்சுமி என்ற படகு கடும் காற்றும், கடல் கொந்தளிப்பும் காரணமாக நயினதீவு வரை சென்றுவிட்டு ஊர்காவற்றுறைக்கே திரும்பி வந்து சேர்ந்தது. 'மகாலட்சுமி' என்ற படகில் 60 பிரயாணிகள் மட்டும்தான் பிரயாணம் செய்ய முடியும். இந்தப் படகு திரும்பி வந்து சேர்ந்த பின் 80 பிரயாணிகள் செல்லக்கூடிய 'கருணை தேவி' என்ற படகில் அந்தப் பிரயாணிகளையும் மற்

...நகர் துறையில் ... இரண்டு படகுகள் கச்சதீவுக்குப் புறப்பட்டுச் சென்றன. நேற்றுப் பிற்பகல் வரை அங்கிருந்து வேறு எந்தப் படகும் புறப்பட்டுச் செல்லவில்லை.

ஊர்காவற்றுறைத் துறையில் நேற்றுப் பிற்பகலில் 564 பிரயாணிகள் கச்சதீவுக்குச் செல்வதற்காகக் காத்துக்கொண்டு நின்றனர். உணவோ, குடிதண்ணீரோ கிடைக்காமலும் கச்சதீவுக்குச் செல்வதற்குப் படகு வசதி இல்லாமலும் பொறுமையிழந்து அவதிப்பட்டனர். இதே சமயம் ஊர்காவற்றுறைத் துறையில் பொலிசாரும் இராணுவத்தினரும் சுங்கப்பகுதியினரும் பெருமளவில் திரண்டுநின்றனர். கைக்குழந்தைகளுடன் வந்து நின்ற தாய்மார்கள மரக்கிளைகளில் சேலைகளைத் தொட்டில்களா

### வடபகுதி அசைஸ் விசாரணை

# "வீட்டு வாசலில் எரிந்தபடி அப்பு அரைஉயிரில் கிடந்தார்"

## சண்டிலிப்பாய் கொலை வழக்கு விசாரணை

யாழ்ப்பாணம், வெள்ளி

'விடிநததும் வீட்டிற்கு வந்தோம் அப்பு வாசலில் எரிந்தபடிகிடந்தார். நானும் கணவனும் அவரைததூககி திண்ணையில் கிடத்தினோம். அப்பொழுது அவர் அரை உயிரில் கிடந்தார். தண்ணீர் தரும்படி கேட்டார், தண்ணீர் கொடுத்தேன். உடுப்புக்கள் எல்லாம் எரிந்து கிடந்தது, அவரை சீலையால் போர்த்தினேன். வாசலில் பந்தம் புகைந்து கொண்டு கிடந்தது,

சண்டிலிப்பாய் கொலை தீவைப்பு வழக்கில் சாட்சியமளித்த சின்னச்சி மேற்கண்டவாறு கூறினார். இவ் வழக்கு நேற்றுக்காலை வடபகுதி அசைஸ் கோர்ட்டில் நீதியரசர் கலாநிதி சி ஜி வீரமந்திரி முன்னிலையில் இரண்டாவது தினமாக விசாரணை செய்யப்பட்டது.

இவ்வழக்கில் சண்டிலிப்பாயில் 68-ம் ஆண்டு ஜூன் மாதம்4-ம் தேதி கந்தையா நாகராசா, சங்கரப்பிள்ளை திருவாதிரை சரவணமுத்து அப்புராசா, முத்தையா, தர்மலிங்கம். ஆறுமுகம் பொன்னுத்துரை நல்லதம்பி துரைராஜா அல்லது துரையன் சுப்பிரமணியம் துரைராஜா ஆகியோர்மீது பொதுநோக்கத்துடன்சட்டவிரோதமாக கூடடம்கூடியதாகவும் கணபதி வைத்தி என்பவரை கொலை செய்ததாகவும் மொத்தம் 13 குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளன.

1-ம், 2-ம்,3-ம்,5-ம்,6-ம், 7-ம் எதிரிகள சார்பில் அட்வகேட் என் சத்தியேந்திரா அட்வக்கேட்ராஜராஜேஸ்வரன் தங்கராசா, அட்வக்கேட் எஸ் சிவபாக்கியநாதன் ஆகியோரின் உதவியுடனும் புறக்டர் எம் சிற்றம்பலத்தின் அனுசரணையுடனும் ஆஜரானார். 4 ம் எதிரிசார்பில் அட்வகேட் வி ஜெகஜோதி, புறக்டர் எம் சிற்றம்பலத்தின் அனுசரணையுடன் ஆஜரானார். எதிரிகளுக்காக அரசாங்கத்தால் அட்வகேட் ஏ. முத்துக்கிருஷ்ணன் நியமிக்கப்பட்டிருந்தார். முடிக்குரிய தரப்பில் அட்வகேட் எல்டி குருசாமி அஜரானார்.

சின்னச்சி சாடசியமளித்தபோது கூறியதாவது: சம்பவம் நடந்த தினம் நாங்கள் பயத்தால் அறைக்குள்இருந்தோம். எதிரிகள் பெரிய ஒழுங்கையில் நின்று சத்தம் போடும்போது என் கணவன் கதவைத் திறந்து வரும்படி கூட்டிச்சென்றார். வெளியில் பிள்ளைகளுடன் வர என் தகப்பனார் வாசலில் கிடந்தார். குசினியும் வேலியும் எரிவதைக் கண்டேன். பாவட்டம் பத்தையடிக்குள் போய் மறைந்தோம். விடியு மட்டும் அங்கேஇருந்தோம் பத்தையில் நாங்கள இருக்கும்போது எனது தகப்பனார் ஐயோ ஐயோ என்று குளறினார். நான் பயத்தால் வரவில்லை. விடிந்ததும் வீட்டிற்கு வந்தோம். பொலிஸார் அங்கு வந்தனர். அப்போது என் வீட்டில் கணவனும் பிளளைகளும் இருந்தார்கள பந்தம் புகைத்துக்கொண்டிருந்தது. மரண விசாரணையில் அப்புவின் சடலத்தை அடையாளம் காட்டினேன்

6 எதிரிகள் சார்பில் ஆஜரான அட்வகேட் என். சத்தியேந்திரா, சாட்சியை குறுக்கு விசாரணைசெய்தார்

வழ: எப்போதாவது கணவனுடன் சம்பவத்தைப் பற்றிக் கதைத்தீரா?-இல்லை. பயத்திஞல் கதைக்கவில்லை

வழ: நீர் சாட்சி அறைக்குள் இருந்தீர்?-ஆம்

வழ: மற்ற சாட்சிகளும் இருந்தனர்?-ஆம்

வழ: நீர் மறைந்துகொண்டிருந்தபோது வெடிச்சத்தம் கேட்டது?-ஆம்

வழ: கீழ்க்கோர்ட்டில் 2 மணிவரை துவக்கு வெடிச் சத்தம் கேட்டதாக சொன்னீரா?-இல்லை.

மேல் விசாரணை இம்மாதம் 11-ம் திகதி காலைவரை ஒத்திப்போடப்பட்டுள்ளது.

லும் கடும் காற்றும் கடல் கொந்தளிப்புமிருப்பதால் தாங்கள புறப்பளடுச் செல்லத்தயாராக இல்லையென்று படகுக்காரர் பலரும் தெரிவித்தனர்.

| | |
|---|---|
| முதல் பரிசு | |
| 04 U 0123 | ரூ.100,000 |
| 2-வதுபரிசு | |
| 16 F 0447 | ரூ. 40,000 |
| 3-வது பரிசு | |
| 06 O 0023 | ரூ. 10,000 |

# படகுகளை நிபுணர் பரிசோதித்தார்


யாழ்ப்பாணம், வெள்ளி

கச்சதீவு பெருநாளுக்கு செல்வதற்காக குருநகர் இறங்கு துறையில் காத்திருக்கும் ஆயிரத்திற்கு அதிகமான யாத்திரிகர்கள் செல்வதற்கான படகுகள் நேற்று மாலை பரிசோதனைசெய்யப்பட்டன. குருநகர் இறங்கு துறையில் நேற்றுமாலைவரை கப்பல் பரிசோதகர் திரு. குணவர்த்தன 33 படகுகளை பரிசோதனை செய்தார்.

கப்பல் பரிசோதகர் திரு. குணவர்த்தனவுடன், யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர் திரு பீட்டர்ஸ், திருமதி ஜி. ஜி பொன்னம்பலம், திரு. குமார் பொன்னம்பலம் டாக்டர் ஏபிரகாம் ஆகியோர் இறங்கு துறைக்கு வந்திருந்தனர்.

நேற்றுக்காலை திருமதி ஜி. ஜி. பொன்னம்பலம், டாக்டர் ஏபிரகாம் ஆகியோர் யாழ்ப்பாண அரசாங்க அதிபரை சந்தித்து, கச்சதீவு யாத்திரிகர்கள் விரைவில் செல்வதற்கான ஏற்பாடுகளைசெய்யும்படியும், இறங்கு துறையில் யாத்திரிகர்கள் பெரும் கஷ்டப்படுவதாகவும் தெரிவித்தனர்.

இவ் வருடத்திற்கான லைசென்ஸ் பெறுவதற்கு 33 படகு சொந்தக்காரர்கள் விண்ணப்பித்துள்ளனர், படகுகளின் பரிசோதனை முடிந்ததும், உடனடியாக லைசென்ஸ் வழங்குவதற்கு அரசாங்க அதிபர் ஒழுங்குசெய்திருப்பதாக திருமதி ஜி. ஜி பொன்னம்பலம் தெரிவித்தார்.



பாலைதீவுப் படகு விபத்தில் உயிர் நீத்தவர்களின் குடும்பத்தவரை யாழ். செயலகத்தில் நேற்று முன் தினம் மாலை சந்தித்த ராஜாங்க அமைச்சர் ஜே. ஆர். ஜயவர்த்தன அவர்களுக்கு ஆறுதல்கூறுகிறார்.

## திருமலையில் பல்கலைக்கழக விசாரணை

திருக்கோணமலை, வியாழன்

''உயர் கல்லூரிகளும்,பாடசாலைகளும் இல்லாத திருக்கோணமலையில் பல்கலைக்கழகம் நிறுவுவதால் பயன் ஏற்படுமா? பல்கலைக்கழகம் பெறமுயற்சிப்பதற்கு முன்னர் கல்லூரிகளையும், பாடசாலைகளையும்பெறுவதற்கு ஆட்சிமன்ற உறுப்பினர்களையும் வற்புறுத்துங்கள்'' இப்படிக் கூறுகிறார்களாம். தேசிய உயர் கல்விச் சபை பல்கலைக்கழக விசாரணைக் குழுவினர்

திருக்கோணமலையில் சாட்சியங்களை பதிவுசெய்துவரும் தேசிய உயர்கல்விச் சபை பல்கலைக்கழகம் அமைப்பது சம்பந்தமான விசாரணைக் குழுத் தலைவர் டாக்டர் மலலசேகரா சாட்சியங்களை வழங்கவரும் பொது ஸ்தாபனப் பிரதிநிதிகளிடம் இவ் விதம் கூறிவருவதாக தெரிவிக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 24 | L | 0599 | 23 | J | 0056 |
| 15 | U | 0348 | 22 | L | 0984 |
| 07 | Z | 0168 | 43 | A | 0535 |
| 23 | K | 0688 | 33 | M | 0217 |
| 11 | W | 0742 | 37 | K | 0894 |
| 03 | D | 0328 | 21 | V | 0516 |
| 15 | T | 0343 | 30 | P | 0364 |
| 30 | Z | 0985 | 18 | N | 0472 |
| 28 | E | 0980 | 05 | J | 0191 |
| 11 | B | 0126 | 38 | C | 0923 |
| 01 | T | 0759 | 27 | L | 0955 |
| 17 | V | 0241 | 34 | K | 0583 |
| 22 | U | 0698 | 29 | E | 0074 |
| 21 | O | 0595 | 35 | V | 0673 |
| 21 | E | 0074 | 20 | K | 0021 |
| 44 | Y | 0117 | 43 | R | 0188 |
| 29 | P | 0594 | 31 | J | 0246 |
| 02 | A | 0904 | 43 | F | 0480 |
| 03 | E | 0704 | 32 | O | 0496 |
| 17 | R | 0206 | 12 | L | 0411 |
| 04 | E | 0751 | 35 | F | 0464 |
| 23 | O | 0292 | 31 | T | 0098 |
| 42 | C | 0204 | 13 | A | 0538 |
| 35 | Γ | 0882 | 16 | R | 0656 |
| 11 | Q | 0146 | 08 | D | 0241 |
| 22 | Z | 0214 | 10 | o | 0258 |
| 22 | M | 0424 | 11 | X | 0954 |
| 37 | B | 0706 | 17 | A | 0649 |
| 39 | N | 0730 | 22 | V | 0404 |
| 18 | M | 0525 | 35 | P | 0788 |
| 31 | M | 0610 | 17 | Z | 0344 |
| 35 | U | 0573 | 03 | o | 0738 |
| 09 | E | 0231 | 35 | Y | 0802 |
| 33 | A | 0909 | 25 | Z | 0856 |
| 18 | o | 0240 | 41 | H | 0155 |
| 08 | Y | 0598 | 44 | J | 0445 |
| 10 | J | 0329 | 32 | P | 0285 |
| 06 | A | 0832 | 34 | P | 0846 |
| 12 | A | 0596 | 06 | R | 0223 |
| 07 | K | 0887 | 01 | U | 0661 |
| 03 | T | 0249 | 18 | B | 0804 |
| 28 | E | 0640 | 11 | V | 0605 |
| 31 | U | 0486 | 07 | Y | 0542 |
| 26 | P | 0640 | 28 | D | 0070 |
| 40 | S | 0674 | 30 | M | 0841 |
| 11 | M | 0996 | 27 | S | 0593 |
| 36 | A | 0601 | 38 | U | 0821 |

(இவை உறுதிப்படுத்தப் படவேண்டியவை)

......

## இன்று

வண்ணை வைத்தீஸ்வரன் தேவஸ்தானத்தில் மூன்றும் நாள் மகோற்சவததுடன் இன்று மகா சிவராத்திரிக்கான விசேட அபிஷேக பூசை நடைபெறும். காமதேனு வாகனத்தில் விநாயகப்பெருமான் இன்று வலம்வருவார், 2-ம் சாம லிங்கோற்ப காலத்தில் சந்தனக்காப்புஅலங்காரக்காட்சியைக்காணலாம்.

0 0 0

சுழிபுரம், வெள்ளி

வழக்கம்பரை சன சமூக பஜனைச் சபையின் ஆதரவில் திரு. எஸ். விசுவலிங்கம்தலைமையில் நடைபெறும் சிவராத்திரி விழாவில் மலேசிய திவ்விய ஜீவன சங்க தலைவர் சுவாமி பிரணவானந்த சரஸ்வதி விரிவுரையாற்றுவார்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

### தேவை

75 கில்லோ வாட்ஸ் நைசனல் மின்சார டீசல் எஞ்சின் இயக்குவதற்கு அனுபவமுள்ள ஒருவரும் கணக்காளர் (காஷியர்) ஒருவரும் தேவை. நற்சாட்சிப் பத்திரங்களுடன் உடனடியாகத் தொடர்பு கொள்ளவும். சென். பீற்றஸ் ஐஸ் பாரறி, முல்லைத்தீவு.
1903

### விற்பனைக்கு

2 பரப்பு குடி நிலம் பிரயோசனத்துடன், 91/A, பிரவுண் வீதி, யாழ்ப்பாணம் தொடர்பு: இராசரத்தினம், வழக்கறிஞர், சிவப்பிரகாசம் ரோட், வண்ணார்பண்ணை
1900

### WANTED

Wanteda Manager with knowledge of Typing with Security from 1-4-70 Apply immediately Rajan Iron Works, No. 8, Stanley Road, Jaffna
1905

### FOR SALE

GESTETNER fully automatic electrically operated Model 260 Duplicating Machine in perfect condition for Sale 25|1, Chetty Street, Nallur, Jaffna.
1904

## டயமன் கோஷ்டி சம்பியனானது

புலோலி, வியாழன்

பருத்தித்துறை யுனைற்றட் விளையாட்டு கழகத்தினரால் நடாத்தப்பெற்ற வீரவாகு வெற்றிக்கேடய உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி இறுதியாட்டத்தில் வதிரி டயமன்ட் கோஷ்டியும், வல்வைக் கோஷ்டியும் கலந்து கொண்டன.

இப்போட்டியில் வதிரி டயமன்ட் கோஷ்டி வெற்றி பெற்று இவ்வருடம் சாம்பியனானது.

இப்போட்டிக்கு திரு. சி. ஜோதிரவி மத்தியஸ்தம் வகித்தார்.

## அறிவித்தல்

யாழ்ப்பாணம் ஐக்கிய இலாபநிதி மூடப்பட்டிருப்பதால் அதைப்பற்றி ஆவன செய்வதற்கு பணம் வர இருப்பவர்கள் 8-3-70 ஞாயிறு காலை 10-00 மணிக்கு யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 145-ம் இலக்க இல்லத்தில் கூடுமாறு வேண்டுகின்றோம்.

மு. சிற்றம்பலம்,
நா. சுப்பிரமணியம்.
''இராசகிரி'',
86 ஏ, சிவன் வடக்கு வீதி,
யாழ்ப்பாணம். 1978

## கேள்வி விளம்பரம்
### பட்டணசபை, பண்டத்தரிப்பு.

பின்வரும் வேலைகளுக்குச் சீல் வைத்த கேள்விகள் 31-3-70 முற்பகல் 10 மணி வரை என்னால் ஏற்றுக் கொள்ளப்படும். கட்டுப் பணமாக ரூபா 50-00-ம் கேள்விப் பத்திரக் கிரயமாக ஒவ்வொன்றிற்கும் ரூபா 5-00ம் செலுத்தியதன் பேரில் 25-3-70 பிற்பகல் 3 மணி வரை இக்கந்தோரில் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரருக்கு கேள்விப்பத்திரம் வழங்கப்படும். அனுபவம் வாய்ந்த ஒப்பந்தகாரர் ரூபா 25-00 செலுத்தி இச்சபையில் பதிந்து கொள்ளலாம்.

மேலதிக விபரங்கள் பட்டணசபைக் காரியாலயத்தில் அறிந்துகொள்ளலாம்.

1. சில்லாலை வீதி திருத்தம்.
2. சாந்தை வீதி திருத்தம்.

இ. செல்வரத்தினம்,
தலைவர்,
பட்டணசபை,
பண்டத்தரிப்பு
பட்டணசபைக் காரியாலயம்,
பண்டத்தரிப்பு,
திகதி:- 5-3-70.
1979

வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க

## கேள்விப்பத்திர அறிவித்தல்

மன்னார் மாவட்டம் இலுப்பைக்கடவைக் கிராம சபையில் ஓர் மத்திய நூல் நிலையம் கட்டும் சேவைக்கு ஒப்பந்தகாரரிடமிருந்து விண்ணப்பங்கள் 20-3-70ந் திகதி காலை 10 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

கேள்விப்பத்திரங்கள் 19-3-70ந் திகதி மாலை 4 மணிக்கு முன் எமது கிராமசபையில் மேற்காட்டிய வேலைக்கு ரூபா 50/- கட்டுப்பணமாகவும் ரூபா 10/- விண்ணப்பப் படிவப் பணமாகவும் செலுத்தி பெற்றுக் கொள்ளப்பட வேண்டும். விண்ணப்பப் படிவத்தின் பெறுமதி ரூபா 10/-தும் எக்காரணம் பற்றியும் திருப்பிக் கொடுபடமாட்டாது. வேண்டிய விபரங்கள் எமது கிராமசபை அலுவலகத்தில் அல்லது மன்னார் உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அவர்களின் அலுவலகத்தில் அறிந்துகொள்ளலாம்.

ஒப்பம்:
வே. கைலாயபிள்ளை,
கி. ச. தலைவர்.
கிராமசபை அலுவலகம்,
இலுப்பைக்கடவை,
5-3-70. 1980

உடுப்பிட்டி

## உடற்பயிற்சிப் போட்டி

இமையாணன், வியா.

உடுப்பிட்டி வட்டாரபாடசாலைகளின் உடற்பயிற்சிப் போட்டி உடுப்பிட்டிவட்டார கல்வியதிகாரி திரு எஸ். மகேஸ்வரஐயர் தலைமையில் உடுப்பிட்டி மகளிர் கல்லூரி விளையாட்டுமைதானத்தில் நடைபெற்றது.

வெற்றி பெற்ற வீரர்களுக்கு உடுப்பிட்டி மகளிர் கல்லூரி அதிபர் செல்வி மான் தராதரப்பத்திரங்களை வழங்கினார்.

இப்போட்டிகளில் முதலாவது இடத்தைப்பெற்ற பாடசாலைகளும் பருத்தித்துறை வடஇந்து மகளிர் கல்லூரியும் யாழ்மாவட்ட பாடசாலைகளின் உடற்பயிற்சிப் போட்டியில் கலந்து கொள்ளும்.

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்
### வெள்ளி 6—3—70

(செய்திகள்: காலை 6-45, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

344 மீ. அன்ட் 61 மீ.

காலை 6-15 நாதாஞ்சலி, 6-25 சைவ நற் சிந்தனை, 6-30 இஸ்லாமியநற்சிந்தனை, 6-35 துதிப்பாடல்கள், 7-15 பண்ணாரிந்தமிழ், 7-45 திரைகானம், 8-00 செய்திச் சுருக்கம், 8-03 முஸ்லிம் நிகழ்ச்சி, 8-15 இஸ்லாமிய கீதங்கள், 8-30 செய்திச் சுருக்கம்.

344 மீ. அன்ட் 49 மீ.

பகல் 12-00 செய்திச் சுருக்கம், 12-03 சித்திர கானம், 1-00 அரங்கேற்றம், 1-30 செய்திச்சுருக்கம்.

344 மீ. அன்ட் 61 மீ.

மாலை 4-25 செய்திச் சுருக்கம், 4-28 கல்வி ஒலிபரப்பு, 5-00 செய்திச்சுருக்கம், 5-03 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-30 ஒடி விளையாடுபாப்பா.

இரவு 6-15 இசைப்பயிற்சி, 6-30 கிராமசஞ்சிகை, 7-00 செய்திச் சுருக்கம், 7-03 கிராமசஞ்சிகை, 7-15 வயலின், 7-45 திரைகானம், திரம், 8-00 செய்திச்சுருக்கம், 8-03 முஸ்லிம்நிகழ்ச்சி, திருக்கேதீஸ்வர சிவராத்திரி விழா அஞ்சல்.

......

## புதுவருட நிர்வாகிகள்

கொக்குவில், வியாழன்

கொக்குவில் சனசமூக நிலையத்தின் 21-வது வருடாந்தக் கூட்டம் கடந்த மாதம் 28-ம் திகதி நிலைய உபதலைவர் திரு. வி. சண்முகநாதன் தலைமையில் நடைபெற்றது, இக்கூட்டத்தில் பின்வருவோர் புதுவருட நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர். போஷகர்கள்: திரு, க. கனகரத்தினம், திரு. பொ. தம்பி, திரு சு, தருமசிங்கம், தலைவர்: திரு, வி. சண்முகநாதன், செயலாளர் திரு. சி. மகேந்திரன் பொருளார் இ. செல்வராசா.

செயற்குழுஒன்றும்தெரிவு செய்யப்பட்டது.

கிரிக்கெட்

# யாழ். மத்தியகல்லூரி வெற்றி

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ். மத்திய கல்லூரிக்கும், வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரிக்குமிடையில் நடைபெற்ற கிரிக்கெட் போட்டியில் யாழ் மத்திய கல்லூரி வெற்றி பெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ்ப்பாணக் கல்லூரி மொத்தம் 30 ஓட்டங்களை மட்டுமே பெற்றது. யாழ். மத்திய கல்லூரி முதல் இன்னிங்ஸில் 128 ஓட்டங்களையும், யாழ்ப்பாணக் கல்லூரி 2-வது இன்னிங்ஸில் 64 ஓட்டங்களையும் பெற்றன.

யாழ். மத்திய கல்லூரி தனது 2-வது இன்னிஸில் மிகவேகமாக ஓட்டங்களைச் சம்பாதித்தது. இக் கோஷ்டி 5 விக்கெட் நஷ்டத்துககு 211 ஓட்டங்களைப் பெற்று ஆட்டத்தை நிறுத்திக் கொண்டது. இதில் ஜெயக்குமார்-51, ஜெலிங்கம்-41, ஜயசிங்கம்-39 ஓட்டங்களைப் பெற்றனர்.

போட்டியின் முடிவில் யாழ். மத்திய கல்லூரி 5 விக்கெட்டுகளாலும் 235 அதிகப்படியான ஓட்டங்களாலும் வெற்றி பெற்றது.

இப்போட்டி யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

(தே நி

# சிவராத்திரி விழா

உடுப்பிட்டி, வியாழன்

மகாசிவராத்திரி விழாவை முன்னிட்டு கரணவாய் தெற்கு, துர்க்கைப் புலம் கலட்டிப் பிள்ளையார் கோவிலில் சிவலிங்கத்திற்கும் கௌரி அம்பாளுக்கும் இரவு முழுவதும் விசேட அபிஷேகம், அர்ச்சனை, ஆராதனைகள் சிறப்பாகச் செய்யப்பட உள்ளன. சங்கீதகதாப் பிரசங்கம் கூட்டுப் பிரார்த்தனைகள் நாட்டுக்கூத்து முதலியனவும் இடம்பெறும். மறுநாள் அதிகாலையில் தீர்த்தோற்சவத்துடன் அன்னதானமும் வழங்கப்படும்.

0 0 0

அல்வாய் மனோகரா சனசமூக நிலையத்தினர் சிவராத்திரி விழாவை வெகு சிறப்பாகக் கொண்டாட முடிவு செய்துள்ளனர். சி. சிவநேசன்கோஷ்டியினரின் 'காதல் கல்யாணம்' நகைச் சுவை நாடகமும் திரு. பரமானந்தனின் 'மறக்க முடியுமா' என்னும் நாடகமும் அரங்கேற்றப்படவிருக்கின்றது.

0 0 0

அல்வாய் சாமணந்தறைப் பிள்ளையார் ஆலயத்தில் மஹாசிவராத்திரிவிழா திரு. மு. பொன்னையா தலைமையில் நடைபெறவுள்ளது. இரவு 4 நாடகங்கள் ஒரே மேடையில் நடாத்தப்படவிருக்கின்றன.

அல்வாய் விஸ்வகர்ம இளைஞர் மன்றத்தினரின் சிவராத்திரி விழா மாலிசந்தி பிள்ளையார் கோவிலடியில் நடைபெறவிருக்கின்றது.

உரும்பராய்

உரும்பபராய். வெள்ளி

உரும்பராய் ஞானவைரவ கோவிலில் இன்று சிவராத்திரி விழா கொண்டாட ஏற்பாடகியுள்ளது. விசேஷ ஆராதனையும், சமய சொற்பொழிவுகளும் இடம்பெறும். பூதராயர் கோவிலிலும் சிவராத்திரி கொண்டாடப்படும். பொ. சிவலோகநாதனின் வில்லுப்பாட்டும் கதாப்பிரசங்க நிகழ்ச்சிகளும் இடம்பெறும்

0 0 0

### முனீஸ்வரன் தேவஸ்தானத்தில்

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ்ப்பாணம் கோட்டை முனீஸ்வரன கோவிலில் மகாசிவராத்திரியை முன்னிட்டு விசேஷ நாலுசாம அபிஷேகங்கள் நடைபெறவுள்ளன. இப்பூசை அபிஷேகங்களில் அடியார்கள் கலந்துகொள்வதற்கு வசதியாக வழமையாக நடைபெறும் வெள்ளிக்கிழமை இரவு அர்ச்சனைகள் நடைபெருதென அறிவிக்கப்பட்டுள்ளது.

0 0 0

சங்கானை, வெள்ளி

சங்கானை நிகர வைரவர் ஆலய முன்றலில் சிவராத்திரிவிழா கொண்டாடப்படும். சிவராத்திரி மகிமையை விளக்கும் ''உருக்குமாங்கதன்'' நாடகம் விழாவில் இடம்பெறும்.

0 0 0

MANOHARA
JAFFNA
Daily 4-45, 7 & 9-45 p.m
Poya, Preya 4 shows
HELGA
'The most revealing Sex education Film ever released'
(Strictly for adults only)
கருவுற்பத்தி முதல் பிரசவம் வரையில் இதுவரை திரைக்கு அனுமதிக்கப்படாத பல சம்பவங்களை புதிய சாதனைக் கருவிமூலம் வெளிப்படுத்திக் காட்டும் பிரசவ சித்திரம்.
ஹெல்கா
(கட்டாயமாக வயது வந்தவர்களுக்கு மட்டும்)

REGAL JAFFNA
Daily 4-15, 7 & 9-45 p.m
Poya. Prepoya 4 Shows
Tony Franciosa
and Anjanette Comer
in
IN ENEMY COUNTRY
(Technicolor)

வல்வெட்டித்துறை
றஞ்சனா தியேட்டர்
தினசரி: 6-30, 9-30
இன்று நள்ளிரவு 1-30 க்கு காட்சியுண்டு
சிவாஜி - பத்மினி - ராமராவ் நடித்த
சம்பூரண ராமாயணம்

ஸ்ரீ காலிங்கன்
இணுவில்
தினசரி 6-30 9-30
பிறிப்போயா, போயா 2-30 மணி
இன்று நள்ளிரவு 1-30 க்கு காட்சியுண்டு
எம்.ஜி. ஆர். - சரோஜாதேவி நடித்த
ஆசைமுகம்

## அறிவித்தல்

9-3-70 தொடக்கம் யாழ்ப்பாண மாநகரசபை அலுவலகத்திலுள்ள நிலுவை அளவைப் பகுதியில் நிலுவை அளவை உபகரணங்களுக்கு, பின்வரும் நாட்களில் தினமும் காலை 8-30 மணி தொடக்கம் பிற்பகல் 3 மணி வரை முத்திரையிடப்படுமென பொதுமக்கள் தகவலுக்காக இத்தால் அறிவித்தல் தரப்படுகின்றது.

தங்களது நிலுவை அளவை உபகரணங்களை 1970-ம் ஆண்டிற்கு முத்திரையிடும்படி சகல வியாபாரிகளையும் கேட்டுக்கொள்ளப்படுகின்றது. முத்திரையிடாத வியாபாரிகள் மீது சட்டநடவடிக்கை எடுக்கப்படும்.

முத்திரையிடும் நாட்கள்
போயா 1-ம் நாள்
,, 3-ம் நாள்
,, 5-ம் நாள்

ஏ. ரி. சுந்தரம்,
ஆணையாளர்,
யாழ்ப்பாண மாநகரசபை.
மாநகரசபை அலுவலகம்,
யாழ்ப்பாணம்,
3-3-70. 1981

## புதிய காரியதரிசி

முல்லைத்தீவு, வியாழன்

முல்லைத்தீவுப் பட்டின சபையின் புதிய காரியதரிசியாக முல்லைத்தீவு கரைச்சிக் குடியிருப்பைச்சேர்ந்த திரு. வே. செல்லையா கடமையேற்றுள்ளார். இவர் சுன்னுசம் பட்டினசபையில் இருந்து இடமாற்றலாகிவந்துள்ளார்.

......

சங்கானை, வியாழன்

கடந்த வருடம் அமோக விளைச்சலைக்கொடுத்த கல்லுண்டாய் உப்பளம் இவ்வருடம், வீழ்ச்சியடைந்துள்ளது. உப்பு எடுக்கக் கூடிய சாத்தியக்கூறுகளே தென்படவில்லையாம்.

ராஜா யாழ்ப்பாணம்
தினசரி 2-30, 6 30, 9-45 மணி
போயா, பிறிப்போயா 10-30 மணி.
இன்று நள்ளிரவு 1-30க்கு காட்சியுண்டு.
சிவாஜி, ஜி வரலட்சுமி
எம். என். நம்பியார்
மற்றும் பலர் நடித்த
ஹரிச்சந்திரா

உங்களை மகிழ்விக்க பவனி வருகிறார்கள்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பயிர்த் தொழிலின் அதிசய
கண்டுபிடிப்பு ....

# 'அல்கதீன்' குழாய்



பிற உற்பத்திப் பொருள்களும் இப்பணிகளையெல்லாம் செய்தல் கூடும். ஆனால், அல்கதீன் கூடுதலாகச் செய்வது என்ன? பயிர்த் தொழிலில் எல்லா வகையிலும் முன்னேற்ற வழியில் முன் நிற்பதுதான்.

நீர்பாய்ச்சும் பொறியியலாளர், பயிர்த் தொழிலாளர், தோட்ட முதலாளிகள், கொள்வனவு செய்யும் முகவர்கள் ஆகிய எல்லோருமே குறைகள் உண்டா எனக் கூர்ந்து அவதானிப்பவர்கள். அவர்கள் யாவருமே இன்று கிடைக்கும் குழாய்களுள் மிகச் சிறந்தவை என ஒரே முகமாக நீர் பாய்ச்சும் பணிகளுக்கெனத் தேர்ந்தெடுத்திருப்பது அல்கதீன் குழாய்களே. நீளம், குறைந்த எடை, இலகுவான இணைப்பு முறை, மலிவு, இடமாற்றத்துக்கு எளிமை.................... அத்துடன் எளிதில் நொறுங்காத்தன்மை ஆகிய இவைதான் காரணங்கள்.

'அல்கதீன்' குழாய்களுள்ளே முதன்மையானது.

கெமிக்கல் இன்டஸ்ரீஸ் (கொழும்பு) லிமிற்றெட்.
தபால் பெட்டி 352 - கொழும்பு.

AJNS


இரவு 4 நாடகங்கள் ... மேடையில் நடாத்தப்படவிருக்கின்றன.

அல்வாய் விஸ்வகர்ம இளைஞர் மன்றத்தினரின் சிவராத்திரி விழா மாலிசந்தி பிள்ளையார் கோவிலடியில் நடைபெறவிருக்கின்றது. கதாப்பிரசங்கங்களும் மூன்று நாடகங்களும் இடம்பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

0 0 0

யாழ்ப்பாணம், வெள்ளி

கொழும்புத்துறை மன்றுளாடும் பெருமாள் விநாயகமூர்த்தி கோவிலில் மகாசிவராத்திரியை முன்னிட்டு இன்று விசேஷ அபிஷேக ஆராதனைகள் நடைபெறும்.

இளைஞர் கூட்டுப் பிரார்த்தனை, பக்திப்பாடல்கள், லிங்கம் சகோதரர்களினதும் திரு.எஸ். நடராசாவினதும் இன்னிசைக் கச்சேரிகள். தமிழ் மணி எஸ். கணேசசுந்தரனின் சங்கீதகதாப் பிரசங்கம் முதலியன நடைபெறும்.

0 0 0

வட்டுக்கோட்டை மூன்றும் பனை வயிரவர் கோவிலில் சிவராத்திரிவிழா நடைபெறும். செல்வி ஜெகதா சாம்பசிவக் குருக்களின் சங்கீத கதாப்பிரசங்கமும் முதலியார் செ.சின்னத்தம்பி, பண்டிதர் நவரத்தினம் ஆகியோரின் சமயச் சொற்பொழிவுகள், பண்டிதர் த. சுப்பிரமணியத்தின் சமய கதாப்பிரசங்கம் மற்றும் இசை நிகழ்ச்சிகள் விழாவில் இடம் பெறும்.

0 0 0

## இசைக்கச்சேரி

யாழ்ப்பாணம், வெள்ளி

இன்று திருக்கேதீச்சரத்தில் சிவராத்திரியை முன்னிட்டு சங்கீதரத்தினம் செல்வி ஞானகுமாரி தங்கராசாவின் இசைக்கச்சேரி நடைபெறவிருக்கிறது

0 0 0

நுணுவில், வெள்ளி

நுணுவில் வீரபத்திரர் ஆலயத்தில் சிவராத்திரி விழா கொண்டாடப்படும். விசேஷ பூசை அபிஷேகங்களைத் தொடர்ந்து பஜனை ஊர்வலமும், வில்லுப் பாட்டு, கவிதாஞ்சலி. கதாப்பிரசங்கம் ஆகிய கலை நிகழ்ச்சிகளும் இடம் பெறும்.

0 0 0

மாவிட்டபுரம், வெள்ளி

குப்பிளான் கற்கரைக் கற்பகவிநாயகர் ஆலயத்தில் சிவராத்திரி விழா கொண்டாடப்படும்.

கட்டுவன் வைரவர் கோவில் தண்ணித்தாழ் வைரவர் கோவில் ஆகியவற்றிலும் சிவராத்திரி விழாக் கொண்டாடப்படவிருக்கிறது.

ஆலய முன்றலில் சிவராத்திரிவிழா கொண்டாடப்படும். சிவராத்திரி மகிமையை விளக்கும் "உருக்குமாங்கதன்" நாடகம் விழாவில் இடம்பெறும்.

0 0 0

பருத்தித்துறை, வெள்ளி

பருத்தித்துறை சிவன் கோவிலில் வழக்கம் போல இவ்வாண்டும் விசேட பூசைகளுக்கிடையே இன்னிசைக் கச்சேரிகள் கதாகாலட்க்ஷேபம், நடனங்கள், மதப் பிரசங்கங்கள் ஆகியன இன்று நடைபெறும். உல்லியன் ஒல்லை அம்மன் கோவிலில் விடியும்வரை நாடகங்கள் நடைபெறவிருக்கின்றன.

0 0 0

வல்வெட்டித்துறை, வெள்ளி

வியாபாரிமூலை சித்தி விநாயகர் ஆலயத்தில் மகா சிவராத்திரி விழா இன்று சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. சங்காபிஷேகத்தைத் தொடர்ந்து கலை நிகழ்ச்சிகள் இடம்பெறும்.

0 0 0

## உருத்திரபுரத்தில்

உருத்திரபுரம், வெள்ளி

உருத்திரபுரம் புராதன சிவாலயத்தில் வழக்கம் போல் சிவராத்திரிவிழா இன்று நடைபெறும் விசேட பூசை, அபிஷேகம், சமயச் சொற்பொழிவுகள் வில்லுப் பாட்டு, சமயநாடகம் ஆகியன இடம் பெறும். மறுநாட்காலை தீர்த்தோற்சவமும், மகேசுரபூசையும் நடைபெறும். இவ்விழாவையொட்டி கிளிநொச்சியிலிருந்து உருத்திரபுரம்போகும் பஸ்வண்டிகள் சிலாபம் வரை சென்று திரும்ப விசேட ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

0 0 0

## பல்கலைக்கழகத்தில்

பேராதனை, வெள்ளி

இலங்கை பல்கலைக்கழக குறிஞ்சிக் குமரன் கோவிலில் இன்று இந்து மாணவர் சங்கச் செயற்குழுவினரால் மகாசிவராத்திரி விழா சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. இவ்விழாவில் விசேட பூசைகள் ஆராதனைகள் பாட்டு, கதாப்பிரசங்கம், கூட்டுப்பிரார்த்தனை யாவும் இரவு முழுவதும் இடம்பெறும்.

0 0 0

அரியாலை, வெள்ளி

ஸ்ரீ கலைமகள் சமயவளர்ச்சிச் சபையினரால் சிவராத்திரிவிழா இன்று கொண்டாடப்படுகிறது. சரஸ்வதி அம்பாளுக்கு அபிஷேகமும், பூசைகளும், ஆலயமுன்றலில் அமைக்கப்பட்டிருக்கும் மேடையில் கலைநிகழ்ச்சிகளும் இடம் பெறும்.

(4-ம் பக்கம் பார்க்க)


ஹரிச்சந்திரா

உங்களை மகிழ்விக்க பவனி வருகிறார்கள்
எம். ஜி. ஆர் ஜெயலலிதா
காதல் வாகனம்
வின்ஸரில்
தினசரி 4 காட்சிகள்
இன்று நள்ளிரவு 1-30க்கு காட்சியுண்டு.

ராணி (யாழ்ப்பாணம்)
[தினசரி 3 காட்சிகள்]
எம். ஜி. ஆர். - ஜெயலலிதா
அசோகன் - சோ - சந்திரபாபு
நடித்த
அடிமைப் பெண்
இன்று நள்ளிரவு 1-30க்கு காட்சியுண்டு

வெற்றிகரமான 2 வது மாதம்
கெப்பிட்டல் (கொழும்பு)
பிளாஸா (வெள்ளவத்தை)
வெலிங்டன் யாழ்ப்பாணம்
தினசரி பி ப 2-30, மாலை 6-30, இரவு 9-30 மணி
இன்று நள்ளிரவு 1-30க்கு காட்சியுண்டு
1968-ம் ஆண்டின் சிறந்த படத்திற்குரிய
ஜனாதிபதியின் பிராந்தியப் பரிசு பெற்ற
வெற்றிச்சித்திரம்




சிவாஜிகணேசன் பத்மினி
பாலையா
நாகேஷ்
நம்பியார்
ஏ.வி.எம். ராஜன்
மனோரமா
மற்றும்பலர் நடித்த



சிவாஜிகணேசன் அளிக்கும்
ஸ்ரீ விஜயலக்ஷ்மி பிக்சர்ஸ்
தில்லானா மோகனாம்பாள்
ஈஸ்ட்மென் கலர்
திரைக்கதை, வசனம், டைரக்ஷன்
A.P. நாகராஜன்

# லெபனுனுக்கு இஸ்ரேல் எச்சரிக்கை

## அரபுக்கொமாண்டோ தாக்குதலை தடுக்கவேண்டும் இல்லையேல் விளைவு மோசமாகுமாம்

டெல்அவிவ், மார்ச்5

லெபனுன் எல்லையில் இஸ்ரேல்மீது அரபுக் கொமாண்டோக்கள் தாக்குதல் நடத்துவதைஉடன்கட்டுப்படுத்த வேண்டுமென்றும் இல்லையேல் அதன் விளைவுகள் விபரீதமாகலாமென்றும் இஸ்ரேல் லெபனுனை எச்சரித்திருக்கிறது

இது இஸ்ரேலின் மிரட்டல் என்று லெபனுன் தலைவர்கள் கருத்துக் தெரிவித்துள்ளனர். இஸ்ரேலின் எச்சரிக்கைபற்றி லெபனுன் மந்திரிசபை நேற்றுக் கூடி ஆராய்ந்தது;

மேற்கு ஆசியப் பிரச்னை குறித்து நியுயோர்க்கில் நான்கு வல்லரசுகளின் பிரதிநிதிகளும் இன்று மீண்டும் கூடி ஆராயவிருக்கின்றனர். இதே சமயம் ஐ. நா. தலைமைக்காரியதரிசி யுதாண்ட் ஐ. நா. விலுள்ள இஸ்ரேல், லெபனுன் அமெரிக்க பிரதிநிதிகளுடன் தனித்தனியே ஆலோசனை நடத்தினுர்.

### பரஸ்பரம் குற்றச்சாட்டு

மேற்காஸியப் பிரச்னையை சோவியத்யூனியன் மோசமாக்குவதாக இஸ்ரேல் வெளிவிவகார அமைச்சர் திரு எபா இபான் இஸ்ரேல் ஆட்சிமன்றத்தில் குற்றம் சாட்டினுர்.

இதேசமயம்மேற்காஸியப் பிரச்னையை அமெரிக்கா மோசமாக்குவதாக ஐக்கிய அரபுக் குடியரசு ஆட்சிமன்றம் குற்றம் சாட்டியது

ஐக்கிய அரபுக் குடியரசு நிலைகள் மீது இஸ்ரேல் நடத்தியதாக்குதல்களில் நேபாம் குண்டுகள் உபயோகிக்கப்பட்டதாக இஸ்ரேல் பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் டயான் ஆட்சிமன்றத்தில் தெரிவித்தார். ஆனுல் கெய்ரோவுக்குச் சமீபத்திலுள்ள உலோகத் தொழிற்சாலை மீது நேபாம் குண்டுகள் உபயோகிக்கப் படவில்லையென்றும் உலோகத் தொழிற்சாலை மீது நடந்த தாக்குதல் தற்செயலாகவும் தவறுதலாகவும் நடந்ததெனவும்அவர் சொன்னுர்.

8 இஸ்ரேலிய போர் விமானங்கள் வானப்பிராந்தியத்தைமீறி எகிப்துக்குள் நேற்றுக் காலை நுழைந்சதாகவும் அரபுக்குடியரசுபோர் விமானங்கள் அவற்றைத் துரத்திவிட்டசாகவும் எகிப்து அறிவித்திருக்கிறது.

# 57பேருடன்பிரஞ்சுநீர்மூழ்கி கடலுக்குப் பலியானது

பாரிஸ், மார்ச் 5

57 பேருடன் சென்ற பிரஞ்சு நீர்மூழ்கிக்கப்பல் மத்திய தரைக்கடலில் காணுமல் போய்விட்டது. அது இழக்கப்பட்டுவிட்டதாக பிரஞ்சு அரசாங்கம் அறிவித்துள்ளது. அந்த நீர்மூழ்கிக்கப்பல் உடைந்து நொறுங்கியிருக்கலாமெனக் கருதப்படுகிறது.

பிரான்சின் கடற்படைத் தளத்திலிருந்து நீருக்குள் சென்றதிலிருந்து அதன் ரேடியோத் தொடர்பு அற்றுப்போனதாம். முப்பது அடி ஆழத்தில் சென்ற அந்தக்கப்பலிலிருந்து வெடிப்புச் சத்தம் ஒன்று பதிவு செய்யப்பட்டதாக ஒரு தகவல் தெரிவித்தது. நேற்றுக்காலையிலிருந்து கடலிலும் வானிலுமாக அந்த நீர்மூழ்கியைக் கண்டுபிடிப்பதற்காக தேடுதல் வேலை நடைபெற்றது. கடலில் திட்டுத்திட்டாக எண்ணெய் மிதந்ததாகவும் அந்தக்கப்பலின் பெயர்பொறிக்கப்பட்ட பிளாஸ்டிக் தஸ்தாவேஜு ஒன்று காணப்பட்டதாகவும்அறிவிக்கப்பட்டது

இந்த நீர் மூழ்கிக்கப்பலில் இருந்த மாலுமிகளில்பாகிஸ்தான் லெப்டினன்டும் ஒருவராவார். இவர் பிரான்சில் பயிற்சிபெற்றுவந்தார்.

## கள்ளுக்கு 9 பேர் பலி

கும்பகோணம், மார்ச் 5

தமிழ்நாட்டில் தஞ்சாவூர் ஜில்லாவில் கீழ்க்காடு கிராமத்தில் கள்ளு அருந்திய ஒன்பதுபேர் மாண்டார்கள். கள்ளில் விஷம் கலந்திருந்ததாகக் கூறப்படுகிறது. கள்ளு அருந்திய மற்றும் எட்டு பேர் கும்பகோணம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைபெற்று வருகின்றனர் இச்சம்பவம் பற்றி பொலிசார் விசாரணைசெய்துவருகின்றனர்.

# கவர்னர் ஜெனரலுக்கு டில்லியில் கிரிவிருந்து

புதுடில்லி, மார்ச் 5

நேபாள இளவரசரின் திருமணத்தில் கலந்து கொண்டபின் புதுடில்லி வந்துள்ள இலங்கை கவனர் ஜெனரல் திரு. வில்லியம் கோபல்லவாவையும் திருமதிகோபல்லவாவையும் கௌரவிக்குமுகமாக இந்தியக் குடியரசுத் தலைவர் திரு வி. வி. கிரி நேற்றிரவு ராஷ்டிரபதி பவனில் விருந்துபசாரமளித்தார். இந்த விருந்துபசாரத்தில் இந்திய பிரதமர் திருமதி இந்திரா காந்தி மற்றும் மந்திரிகள், ஆட்சிமன்ற உறுப்பினர்கள் சிலரும் கலந்துகொண்டனர்

நேபாளத்திலிருந்து வந்த இந்தோனேஷிய வெளிவிவகார அமைச்சர் டாக்டர் ஆதம் மாலிக் பிரதமர் இந்திரா மற்றும் அமைச்சர்களையும் சந்தித்து சர்வதேச பிரச்னைகள் குறித்தும் இந்திய-இந்தோனேஷிய உறவு குறித்தும் பேச்சுவார்த்தை நடத்தினுர்.

## வட இலங்கை சங்கீத சபை பரீட்சை முடிவுகள்

யாழ்ப்பாணம், வியாழன்

நேற்று வெளியான வட இலங்கை சங்கீத சபையின் 1969ம் வருட பரீட்சைகளின் முடிவுகள் வருமாறு:

முதலாம் பகுதி: முதலாம் பிரிவு யாழ்ப்பாணம்- ஜெயதேவி தவரத்தினம்(வாய்ப்பாட்டு)தெல்லிப்பளை-சந்திரவதனி கணபதிப்பிள்ளை(வாய்ப்பாட்டு) ரஞ்சினி மாணிக்கம் (வாய்ப்பாட்டு) தேவதயா நவரத்தினம்(வாய்ப்பாட்டு)

சாதாரணபிரிவு: கொழும்பு- மஞ்சுளா நடராசா (வாய்ப்பாட்டு) ஸ்ரீகாந்தா செல்வராசா(புல்லாங்குழல்) திருமதி சீதாமலர் கணபதிப்பிள்ளை(வீணை) ஜெயலட்சுமி சக்திவேல்(வீணை) சௌம்யா விஜயாம்பாள் நரேந்திரநாதன் (வீணை) திரிநயனி ஜெகதாம்பாள் நரேந்திரநாதன்(வீணை) திவ்ய குமார் வல்லிபுரம் (வாய்ப்பாட்டு) சோபனு மீனும்பாள் நரேந்திரநாதன் (வீணை) ஷிறின் ஜெய்னுடீன் (வாய்ப்பாட்டு) மாலினி காளிதாசன் (வீணை) சந்திரிகா குமாரசாமி (வீணை) ரஞ்சினி நடராசா (வாய்ப்பாட்டு) கோகுலா கந்தசாமி (வாய்ப்பாட்டு( சியாமளா செல்லத்துரை (வாய்ப்பாட்டு) லட்சுமி தியாகராசா (வாய்ப்பாட்டு) ஸ்ரீலதா நாகரத்தினம் (வாய்ப்பாட்டு)பவானிஉரித்திரா(வாய்ப்பாட்டு ஸ்ரீகல்யாணி கமலராஜன் (வாய்ப்பாட்டு) அனுஷா மயில்வாகனம் வாய்ப்பாட்டு) ரஜனி நமசிவாயம்(வாய்ப்பாட்டு).

கொழும்பு-சாதாரணபிரிவு (வாய்ப்பாட்டு) நளாயினி ஆறுமுகம், லட்சுமி சபாநாதன், காஞ்சனு தாமோதரம், ஜெகபாலினி கேதீஸ்வரநாதன், சாந்தினி நடராசா. பிரேமளாசிங்கராசா, ரட்ணலட்சுமி கந்தையா, கௌரி ஷீலாரமணி குமாரகுலசிங்கம், சாவித்திரி குமாரகுலசிங்கம், குகராணி நடராஜா, புஷ்பலதா கணேசன், காயத்திரிபாபு நடராசா, சிவகுமாரி நடராசா, சித்திரமாலாபாலேந்திரா, நிர்மலா அந்தோனிமுத்து, செல்வவதி திருச்செல்வம், காயத்திரி ஸ்கந்தராசா, ராகினிதேவி செல்லமுத்துப்பிள்ளை வாசுகி நடராசா, சாந்தினி வடிவேல். ஞானேஸ்வரி சிதம்பரப்பிள்ளை, சிவமலர் இராசரத்தினம், மங்களராணி முருகேசு, நீலாம்பிகை முருகேசு, கீதாகௌரி கணேசன், மீனலோசனி வீரசிங்கம், யுகந்தி சண்முகரத்தின சர்மா.

கொழும்பு: சாதாரணபிரிவு (வீணை)- பாமா தருமராசா. நிர்மலா நாகலிங்கம் புஷ்பலதா கணேசன், உமாதேவி திசவீரசிங்கம் யசோதரா பத்மநாதன், சாந்திவேலுப்பிள்ளை.

கொழும்பு சாதாரணபிரிவு (வயலின்)- காயத்திரிபாபு நடராசா, ஞானேஸ்வரி சிதம்பரப்பிள்ளை, ஜெயந்தி கதிரேசன்.

கொழும்பு சாதாரணபிரிவு (புல்லாங்குழல் - இந்திரை சபாரத்தினம். (தொடரும்)

# வருமான வரிப்பாக்கியை எம்.ஜி.ஆர். தவணையில்கட்டுவார்

புதுடில்லி, மார்ச்.5

திரைப்படத் தொழிலைச் சேர்ந்தவர்கள் தங்கள் வருமானத்தை மறைப்பதாக தெரியவந்ததன் பேரில் அவர்களின் மறைப்பு நடவடிக்கைகளுக்கு வருமான வரி இலாகா ஆதாரங்களைச் சேகரித்து வருவதாக துணை நிதி அமைச்சர் சேத்தி லோகசபையில் தெரிவித்துள்ளார்.

மேலும் அவர் திரைப்படத் தொழிலாளர்களது வருமான மறைப்புப் பற்றியும் அவர்கள் செலுத்திய செலுத்த வேண்டிய விபரங்களையும் தெரிவித்தார்

நடிகர் எம். ஜி. ராமச்சந்திரன் செலுத்த வேண்டிய வரி பாக்கிமொத்தம் ரூபா ராஜ்ஸ்ரீ (ரூ 54375) உபல் ராஜஸானி(ரூ62613) நந்தா (ரூ 154 169 ஐ எஸ். ஜோகர் (ரூ 25213)

வருமானவரி அதிகாரிகள் சோதனை நடத்தியதில்திலீப் குமார் விவகாரத்தில் ரூ 2188989 மறைக்கப்பட்ட வருமானம் கண்டு பிடிக்கப்பட்டது, ராஜ்கபூர் விவகாரத்தில் தங்கநகைகள் கண்டுபிடிக்கப்பட்டன. ஆஷாபரேக் விவகாரத்தில் ரூ 215000க்கு கணக்கில் காட்டப்படாத வருமானமும் மாலா சின்ஹா விவகாரத்தில் ரூ. 18,38,000 மறைக்கப்பட்ட வருமானமும் மற்றும் நகைகள், தங்கம், சவரன்கள் முதலியவையும் கண்டு பிடிக்கப்பட்டனஎன்று மந்திரி மேலும் தெரிவித்தார்.

வருமானவரி பாக்கி செலுத்தவேண்டியவர்கள் ராஜ்கபூர் ரூ. 10,07078: திலிப் குமார் 298277: சாதனு ரூ. 120851.

மகாவலி

## 'உலக வங்கி நோக்கி திருப்பப்பட்டுள்ளது'

## யூ. எஸ். பத்திரிகையாளருக்கு பெரும் பதவி

கொழும்பு வியா

அமெரிக்காவின் பிரபல பத்திரிகையாளர்களுள் ஒருவரான திரு. அல்வாரோ காசியா பேன, வாஷிங்டனில் இயங்கும் ஜனத்தொகை ஆய்வுக்கான சர்வதேச திட்டப் பிரிவின் ஆணையாளராகவும் உபதலைவராகவும் நியமிக்கப்பட்டுள்ளார்.

லத்தீன் அமெரிக்கப் பத்திரிகைத் துறையில் திரு. அல்வாரோ பெரும் புகழ் வாய்ந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

'அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளுக்கு ஜனத்தொகைப் பிரச்னை எத்துணை பயமானது என்பதை நாளுக்கு நாள் உலகம் பரி

## 'மக்கள் விருப்பின்றி பதவியில் இருக்கமாட்டோம்

— மொன்டேகு

பண்டாரவளை, வியா.

'ஜனநாயக தத்துவங்களை அரசாங்கம் கடைப்பிடித்து வருகிறது. மக்கள் விருப்பமின்றி நாம் ஒருகணமேனும் பதவியில் இருக்கமாட்டோம். எங்கள் பதவிக்காலமாகிய 5 வருடம் பூர்த்தியானதும் ஆட்சிமன்றம் கலைக்கப்படும்'

பொதுவேலை அமைச்சர் மேஜர் மொண்டேகு ஜயவிக்கிரம பண்டாரவளையில் நடைபெற்ற ஐ தே கட்

'மக்களின் ஜனநாயக உரிமைகளை அரசாங்கம் காக்கும் கடமைக்கே தன்னை அர்ப்பணித்துள்ளது எனவும் தங்கள் பிரதிநிதிகளைத் தெரிவுசெய்யும் உரிமை மக்களிடமேயுள்ளது எம். பிக்களும் அமைச்சர்களும் மக்களின் ஊழியர்களே எனவும் திரு. மொண்டேகு ஜயவிக்கிரமா தொடர்ந்து பேசுகையில் குறிப்பிட்டார்.

திருவாளர்கள் ஆர் எம் பியசேனு, பி கே லியனகே

வடமராட்சி ஆ. சங்கம் நடத்திய

## இசை, தமிழ், ஆங்கில போட்டி முடிவுகள்

இமையாணன், வியாழன்

வடமராட்சி ஆசிரியர் சங்கத்தினரின் ஆதரவில் நெல்லியடி மத்திய கல்லூரியில் நடைபெற்ற இசை, ஆங்கிலம், தமிழ்ப் பேச்சுப் போட்டி முடிவுகள் வருமாறு:

இசைப் போட்டி: ஆண்கள் தனித்துப் பாடல்: மேற்பிரிவு: வி கிருஷ்ணபிள்ளை இருதயககல்லூரி.

ஆண்கள் கூட்டுப்பாடல்: கீழ்ப்பிரிவு: தேவரையாளிக் கல்லூரி.

கீழ்ப்பிரிவு: தனித்துப் பாடல் பெண்கள்: ஆர் பிரேமஜெயந்தி மெதடிஸ்த மக, இ சீத்தா கல்யாணி கல்லூரி

மேற்பிரிவு: எஸ் செல்வஜோதி மெதடிஸ்த மகளிர் கல்லூரி எஸ் விமலசுந்தரி வட இந்து மகளிர் கல்லூரி எஸ். சிவாஜினி வட இந்து மகளிர் கல்லூரி.

ஆங்கிலப் பேச்சுப்போட்டி (ஆண்கள்) கீழ்ப்பிரிவு: ரி முரளீதரன் சிதம்பராக் கல்லூரி, கே பிரேமச்சந்திரன் தேவரையாளி இந்துக்கல்லூரி, கே சிவராசா நெ ம ம வி.

மத்திய பிரிவு: எம் ஈஸ்வரகுமார் நெல்லியடி ம ம வி, பி பாலராஜன் நெல்லியடி ம ம வி.

மேற்பிரிவு: வி சுந்தரரா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருமான மறைப்புப் பற்றியும் அவர்கள் செலுத்திய செலுத்த வேண்டிய விபரங்களையும் தெரிவித்தார்

நடிகர் எம். ஜி. ராமச்சந்திரன் செலுத்த வேண்டிய வரி பாக்கி மொத்தம் ரூபா 11,77,364. இதனை அவர் தவணைகளில் செலுத்த அனுமதிக்கப்பட்டிருக்கிருர் என்று லோகசபையில்இன்று தெரிவிக்கப்பட்டது.

நடிகை வைஜந்திமாலா செலுத்த வேண்டிய வரிப் பாக்கி ரூபா 1,18,538.

இதில் பெரும் பகுதி குறித்து வருமானவரி அப்பீல் உதவி கமிஷனரிடம் அப்பீல் செய்யப்பட்டுள்ளன. அவர் விவகாரத்தில் மறைக்கப்பட்ட வருமானம் எதுவும் கண்டு பிடிக்கப்படவில்லை. எனினும் விவரம் தெரிவிக்கப்படாத கணக்கிலும் ஸ்ரீமதி யதுகிரி தேவி பெயரிலும் ஸ்ரீமதி எம்.ஜி. ராமன் பெயரிலும் வந்த தொகை சம்பந்தமாகவும் ரூ. 2,48 366 கூடுதல் வரி விதிக்கப்பட்டுள்ளது. இவ் விபரங்களை துணை நிதி மந்திரி ஸ்ரீ பி. சி. ஸேதி கேள்வியொன்றுக்கு எழுத்து மூலம் பதிலளிக்கையில் தெரிவித்தார்:

1962-63ல் ரூபா 1 லட்சம் வருமானத்தையும் 1963-64ல் ரூபா 75ஆயிரம் வருமானத்தையும் நடிகர் ஆர். கணேஷ் காட்டவில்லை. 1962-63 வருட வருமானம் சம்பந்தமாக அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. அதற்கு அடுத்த ஆண்டுக்கு நடவடிக்கை இறுதியாக்கப்படவில்லை, கணேஸ் செலுத்தவேண்டிய வருமான வரி பாக்கி ரூ 1,01,427 என துணை மந்திரி மேலும் தெரிவித்தார்.

1968-69ம் ஆண்டில் திரைப்படத் தொழிலில் ரூ. 1 லட்சத்துக்கு மேல் வருமானம் உள்ளவர்கள் செலுத்திய வருமான வரி விபரம் வருமாறு: (அடைப்புக்குறிக்குள் செலுத்தப்பட்ட வருமானவரிதொகை விபரம் தரப்பட்டுள்ளது.)

பிஸ்வஜீத் (ரூ 1,15,199) சுசித்ராஸென் (ரூ14,200), உத்தம்குமார் (ரூ 94 300), எம். ஜி. ராமச்சந்திரன் (ரூ 6,75674), பத்மினி (ரூ 356 338). வைஜந்திமாலா (ரூ 301,363), ஜெமினிகணேஷ் (ரூ 124,772), எஸ். சங்கர். (ரூ 20951) எஸ் வி. ரங்கராவ் (ரூ107. 877) பி, சரோஜாதேவி (ரூ 243 054) பி. பானுமதி (ரூ 17,548) ஏ. நாகேஸ்வரராவ் (ரூ 73,904), திலீப்குமார் (ரூ 210.450) சசிகபூர் (ரூ 71591), சாதனா (ரூ 96200) தனுஜா (ரூ 44671) தேவானந்த் ரூ 55745) மீனுகுமாரி (ரூ 61890) மெஹமூத் முத்தாஜ்அலி(ரூ15994) நூடான் (ரூ 15700) ஆஷாபரேக் (ரூ 70084)ராஜ்கபூர் (ரூ20852)

மகாவலி

# 'உலக வங்கி நோக்கி திருப்பப்பட்டுள்ளது'

அத்தனகலே, வியாழன் 'மகாவலிகங்கை வடக்கு நோக்கித் திருப்பப்படவில்லை. உலகவங்கி நோக்கியே திருப்பப்பட்டுள்ளது. உலகவங்கியின் கடன் நிபந்தனைகள் நாட்டுக்கு ஆபத்து விளைவிப்பன.'

அத்தனகலேயில் நடைபெற்ற கூட்டமொன்றில் பேசிய எதிர்க்கட்சித்தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா மேற்கண்டவாறு கூறினர்,

அவர் மேலும்தொடர்ந்து பேசுகையில்: பிரதமர் தனது பதவியைத் தொடர்ந்து வகிப்பதற்காக இரகசிய ஒப்பந்தங்களில் ஈடுபட்டுள்ளார். முதலில் பிரதமராவதற்காக தமிழரசுக் கட்சியுடன் இரகசிய ஒப்பந்தம் செய்து கொண்டார் அதுபற்றி மக்களுக்கு ஒன்றும் தெரிவிக்கப்படவில்லை. தற்போது மகாவலியைச் சாக்காக வைத்து உலக வங்கியுடன் இரகசிய ஒப்பந்தம் செய்துள்ளார் இது பற்றியும் மக்களுக்குத் தெரியாது. இந்த ஒப்பந்தங்கள் பற்றி வெளிப்படையாக மக்களுக்குத் தெரிவிக்கும் படி நான் கேட்டுக்கொள்ளுகிறேன் நாங்கள் மகாவலி திட்டத்தை எதிர்க்கவில்லை. ஆனல் உலகவங்கிக்கு நாட்டை விற்றதையே எதிர்க்கிறேம்' எனக் குறிப்பிட்டார்.

0 0 6

## 10லட்சம் பேருக்கு வேலை வாய்ப்பு

கொழும்பு, வியாழன் 'ஒன்றரை வருடத்திற்குள் 10 லட்சம் பேருக்கு விவசாயம், கடற்றெழில் ஆகிய துறைகளில் வேலை வாய்ப்பு அளிக்கப்படும்'

இது புதிய கட்சியான 'மனித உரிமைக்கட்சி'யின் 21 அம்சத்திட்டத்தில் ஓர் அம்சமாகும். தனது கொள்கை அறிவிப்பில் இப் புதிய கட்சி மேற்படி திட்டத்தை வெளியிட்டதோடு எதிர்வரும் பொதுத் தேர்தலில் 145 அபேட்சகர்களை நிறுத்தப் போவதாகவும் தெரிவித்துள்ளது.

0 0 0

## 'சி. பி. டிக்கே மீண்டும் காணி அமைச்சர் பதவி'

### சுதந்திரக்கட்சி எம். பி.

அனுராதபுரம், வியாழன் 'காலவேவா தொகுதியின் எதிர்வரும் தேர்தலில்முடிவு எப்படியமைந்தாலும் காணி நீர்ப்பாசன அமைச்சர் திரு. சி பி. டி. சில்வா திரும்பவும் அதே அமைச்சர் பதவியைப் பெறுவார் எனநான் உறுதியாகக் கூறுகிறேன்.'

அனுராதபுரத்தில் நடைபெற்ற ஆஸ்பத்திரிதிறப்பு வைபவக்கூட்டத்தில் பேசிய சுதந்திரக்கட்சி ஆட்சிமன்ற அங்கத்தவரான திரு. ஆர் பீ. ரத்தினமாலா மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இக் கூட்டத்திற்கு காணி விவசாய அமைச்சர் திரு, சி. பி. டி. சில்வா தலைமை தாங்கினர்.

...வாய்ந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

'அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளுக்கு ஜனத்தொகைப் பிரச்னை எத்துணை பயமானது என்பதை நாளுக்கு நாள் உலகம் பரிபூரணமாக உணர்ந்து வருகிறது. அதோடு ஒரு தேசத்தின் பொருளாதார மேம்பாட்டுக்கு ஜனத்தொகைப் பெருக்கம் எத்துணை குந்தகம் விளைவிக்க முடியும் என்பதை உணர்த்தும் பணியில் தேசிய பத்திரிகைகள் ஆற்றும் சேவையையும், சர்வ தேச ஜனத்தொகை ஆய்வுப் பிரிவு நன்கு அறிந்துள்ளது' என்று திரு. அல்வாரோவுக்கு மேற்படி உயர்பதவியை வழங்கிய ஜனத்தொகை ஆய்வுப் பிரிவுத் தலைவர் குறிப்பிட்டுள்ளார்.

# 'அரசாங்கத்தை கவிழ்க்க மக்கள் காத்திருக்கிருர்கள்'

கம்பஹா, வியா 1965-ம் ஆண்டு ஐக்கிய தேசியக்கட்சி மககளை ஏமாற்றியது போல் 1970-ம் ஆண்டிலும் ஏமாற்ற முடியாது.

மினுவாங்கொடை ஆட்சி மன்ற அங்கத்தவர் திரு. மைக்கல் சிறீவர்த்தனு தனது தொகுதியில் நடைபெற்ற சுதந்திரக் கட்சிப் பிரசாரக் கூட்டத்தில் மேற்கண்டவாறு கூறினர்.

அவர் மேலும் தொடர்ந்து பேசுகையில் வேலையற்ற பட்டதாரிகள், வெறுப்புற்ற பல்கலைக்கழக மாணவர்கள், கஷ்டப்படும் பொதுமக்கள் ஆகியோர் எதிர்வரும் பொதுத் தேர்தலில் அரசாங்கத்தை வீழ்த்தக் காத்துக் கொண்டிருக்கின்றனர். சிறிமா பண்டாரநாயக்கா அரசாங்கம் நிறுவப்பட்டதும் ஒவ்வொரு பட்டதாரிக்கும், ஜீ. சீ. ஈ. சித்தி பெற்றவர்களுக்கும் உடனடியாக வேலை வழங்கப்படும்.

இக்கூட்டத்தில் திரு. ஆர் எம் இரத்னுயக்கா, திரு. சந்திரபால ஜயசிங்கி, திரு. பிரஜபாலா உட்படப் பலர் உரையாற்றினர்.

— —

## திராவிடர் கழகம் கோரிக்கை

யாழ்ப்பாணம், வெள்ளி பாலைதீவு படகுவிபத்தில் பலியான குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கு அரசாங்கம் உடனடி நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்றும் இப்படியான விபத்து மேலும் ஏற்படாதவாறு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் இலங்கை திராவிடமுன்னேற்றக்கழகம் அரசாங்கத்திடம் கேட்டுள்ளது.

## 'இடமாற்றத்தை ரத்துசெய்க'

முல்லைதீவு, வியாழன் ''முல்லைத்தீவுப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. எஸ். ஜெயசிங்காதிடீர்இடமாற்ற உத்தரவு பெற்றுள்ளதை உடனடியாக ரத்துச்செய்து அவர்முல்லைத்தீவிலே சேவையாற்ற அனுமதிக்க வேண்டும்'' என வவனியா எம். பி. திரு. தா. சிவசிதம்பரம் பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரலை அவசரத் தந்தி மூலம் கேட்டுள்ளார். அத்துடன் கரிக்கட்டு மூலை தெற்கு கிராமசபைத் தலைவர் திரு. சி. சின்னத்துரையும் கரிக்கட்டுமூலைமேற்கு கிராம சபைத் தலைவர் திரு. ந. குமாரசாமியும் மேற்படி இடமாற்ற உத்தரவை ரத்துச் செய்யும்படி தந்திகள் மூலம் இன்ஸ்பெக்டர் ஜெனரலைக் கேட்டுள்ளனர்.

— —

## ஜி. சி. ஈ. முடிவு வெளிவர தாமதம்

பருத்தித்துறை, வியா 1969-ம் ஆண்டு மார்கழியில் நடந்த க. பொ. த. (சாதாரண) பரீட்சை முடிவுகள் வெளிவருவதில் தாமதம் ஏற்படுமெனத் தெரிகிறது. சில விடைபத்திரக் கட்டுகள் கடந்தவாரம்தான் உரிய பரீட்சாதிகாரிகளுக்கு அனுப்பப் பட்டுள்ளதாகவும் இன்னும் சில அனுப்பப்படவிருப்பதாகவும் தெரிகிறது. இக் காரணங்களால்வழக்கத்திலும் பார்க்க இவ்வாண்டு பரீட்சை முடிவுகள் வெளிவருவதில் தாமதமேற்படலாமெனத் தெரிகிறது.

...மாகிய 5 வருடம் பூர்த்தியானதும் ஆட்சிமன்றம் கலைக்கப்படும்'

பொதுவேலை அமைச்சர் மேஜர் மொண்டேகு ஜயவிக்கிரம பண்டாரவளையில் நடைபெற்ற ஐ. தே. கட்சியின் பிரசாரக் கூட்டம் ஒன்றுக்குத் தலைமைவகித்துப்பேசுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்

...களும் அமைச்சர்களும் மக்களின் ஊழியர்களே எனவும் திரு. மொண்டேகு ஜயவிக்கிரமா தொடர்ந்து பேசுகையில் குறிப்பிட்டார்.

திருவாளர்கள் ஆர் எம் பியசேன, பி கே லியனகேடி ரத்னுயக்கா, ஆர் எம் அப்புகமி உட்படப் பலர் உரையாற்றினர்

'மாணவரிடையே

# நல்ல பண்புகளை ஆசிரியர் வளர்க்க வேண்டும்'

யாழ்ப்பாணம், வெள்ளி 'ஆசிரியர்கள் பல விஷயங்களிலும் மாணவர்களுக்கு முன்மாதிரியாக இருக்க வேண்டும். புத்தகத்தை மட்டும் படிப்பிப்பதோடு நில்லாமல் சில நல்ல பண்புகளையும் மாணவர்களிடையே வளர்க்க வேண்டும்

இவ்வாறு வல்வெட்டித் துறை, கம்பர்மலை தமிழ்க் கலவன் பாடசாலையிலிருந்து இடமாற்றலாகிச் செல்லும் திரு கே சின்னத்தம்பி, திரு என் ராஜமாணிக்கம் ஆகியோருக்கு இக்கல்லூரி ஆசிரியர்களால் அளிக்கப்பட்ட பிரிவுபசார விருந்தில் தலைமைதாங்கிப் பேசிய தலைமையாசிரியர் திரு வி செல்லையா எடுத்துக் கூறினர்.

அவர் மேலும் பேசுகையில் இரு ஆசிரியர்களது சேவையும் மறக்க முடியாதது என்ருர்.

திரு. ஏ. சுப்பிரமணியம் பேசுகையில் குறிப்பிட்ட இரு ஆசிரியர்களும் கடமையை உணர்ந்து பொறுப்புடன் நடந்து வந்தது கல்லூரியின் வளர்ச்சிக்கும் மாணவர்களது அறிவு வளர்ச்சிக்குப் பெரிதும் உதவியதென்ருர். திரு. சுப்பிரமணியம் இடமாற்றலாகிச் செல்லும்ஆசிரியர்களது நேர்மை பொறுமை, சேவை மனப்பான்மை பற்றியும் எடுத்துக் கூறினர்

திரு. ரி. கதிரவேலு பேசுகையில் குறிப்பிட்ட இரு ஆசிரியர்களும் அன்புமனம் கொண்டவர்களென்றும் இதனல் அவர்களது முகத்தில் எப்போதும் அமைதி தவழ்ந்து கொண்டிருக்கிறது எனவும் குறிப்பிட்டார்.

திருவாளர்கள் கே சீனித்தம், ரி யோகசாமி கே தம்பிராஜா, கே நடராஜா ஆகியோரும் சேவையைப் பாராட்டிப் பேசினர்.

இரு ஆசிரியர்களுக்கும் அன்பளிப்புப் பொருட்களும் வழங்கப்பட்டன.

## வித்தியா தரிசியாக நியமனம்

பருத்தித்துறை, வியா. நெல்லியடி மத்தியமகா வித்தியாலய ஆசிரியராகக் கடமையாற்றிய திரு. க. குணரத்தினம் முருங்கன் பகுதி வித்தியாதரிசியாக நியமிக்கப்பட்டுள்ளார், பயிற்றப்பட்ட பட்டதாரியான திரு. குணரத்தினம் மத்தியமாகாண ஆசிரியர் சங்கச் செயலாளராகவும் அகில இலங்கைத் தேசிய ஆசிரியர்சங்க நிர்வாகக் குழு உறுப்பினராகவும் கடமையாற்றியுள்ளார். வடமாகாண உயிரியல், நீரியல் ஆராய்ச்சிச்சபையின் முக்கிய உறுப்பினராகவும் இவர் பணியாற்றி வருகிருர்.

— —

## தொலைபேசி வசதி பற்றி ஆட்சிமன்றத்தில்

அல்லைப்பிட்டி, வியா. தேசிய அரசாங்கம் 1969-ம் ஆண்டு கடைசி வரையும் டெடிகம தேர்தல் தொகுதியில் ஏழு உபதபால் நிலையங்களுக்கு வேறு பல தொகுதிகளில் ஐந்து உபதபால் நிலையங்களுக்கும் தொலைபேசி வசதி செய்து கொடுத்துள்ளது. ஆனல் பின்தங்கிய நிலையில் உள்ள ஊர்காவற்றுறை தொகுதியில் இரண்டு உபதபால் நிலையங்களுக்கு மட்டுமே இவ்வசதி செய்து கொடுக்கப்பட்டுள்ளது. இந் நிதி ஆண்டில் புளியங்கூடல் மண்கும்பான், இறுப்பிட்டி, ஊரதீவு, குறிகாட்டுவான், நெடுந்தீவு மேற்கு, நெடுந்தீவு கிழக்கு ஆகிய இடங்களிலுள்ள உப தபால் நிலையங்களுக்கு தொலைபேசி வசதி கொடுப்பதற்கு உடனே நடவடிக்கை எடுக்கவும்' என இம்மாதம் 10-ம்திகதி நடைபெறவிருக்கும் ஆட்சி மன்றக் கூட்டத்தில் விவாதிப்பதற்கு கா. பொ. இரத்தினம் எம். பி. முன்னறிவித்தல் கொடுத்துள்ளார்.

ஆண்கள் கூட்டுப்பாடல்: கீழ்ப்பிரிவு: தேவரையாளிக் கல்லூரி.

கீழ்ப்பிரிவு: தனித்துப் பாடல் பெண்கள்: ஆர் பிரேமஜெயந்தி மெதடிஸ்த ம க, இ சித்தா கல்யாணி வட இந்து ம க, எஸ் நந்தினி மெதடிஸ்த ம க.

மேற்பிரிவு தனித்துப் பாடல் பெண்கள்: எஸ் சந்திரா நெல்லியடி ம மகா வி வி செல்வரத்தினம் வட இந்து ம க, எஸ் ஜனதா மெதடிஸ்த ம க.

கீழ்ப்பிரிவு கூட்டுப்பாடல் பெண்கள்: மெதடிஸ்த மகளிர் கல்லூரி, வட இந்து மகளிர்கல்லூரி, மெதடிஸ்த மகளிர் கல்லூரி.

மேற்பிரிவு: வட இந்து மகளிர் கல்லூரி, உடுப்பிட்டி மகளிர்கல்லூரி, மெதடிஸ்த மகளிர் கல்லூரி.

தமிழ்ப் பேச்சுப்போட்டி: (பெண்கள்) கீழ்ப்பிரிவு: எஸ் சற்குணமலர் உடுப்பிட்டி மகளிர்கல்லூரி வி நாகேஸ்வரநாயகி வட இந்து மகளிர் கல்லூரி ரி றமணி மெதடிஸ்த மகளிர் கல்லூரி.

மத்திய பிரிவு: எஸ் நகுலேஸ்வரி மெதடிஸ்த மகளிர் கல்லூரி, கே குலராணி உடுப்பிட்டி மகளிர் கல்லூரி, வி கலாராணி உடுப்பிட்டி மகளிர்கல்லூரி.

மேற்பிரிவு: எம் அன்னம்மா மெதடிஸ்த மகளிர் கல்லூரி எஸ் தமிழரசி வட இந்து மகளிர் கல்லூரி, இ வரதலக்ஷ்மி உடுப்பிட்டி மகளிர் கல்லூரி.

தமிழ்ப் பேச்சுப்போட்டி: (ஆண்கள்) கீழ்ப்பிரிவு: கே வித்தியானந்தம் நெல்லியடி ம ம வி, ஏ றேய் ஜெயறஞ்சன் அமெரிக்கன் மிஷன் கல்லூரி, எம் கனகசபை ஹாட்லிக் கல்லூரி பருத்தித்துறை.

மத்திய பிரிவு: எஸ் மனேறஞ்சன் ஹாட்லிக் கல்லூரி பருத்தித்துறை, ஆர் நரேந்திரன் ஹாட்லிக் கல்லூரி சி நாகேஸ்வரன் அமெரிக்கன் மிஷன் கல்லூரி.

மேற்பிரிவு: பி ஸ்ரீ ஜெயபாஸ்கரன் ஹாட்லிகல்லூரி ஏ எம் ஜெயரத்தினம் நெல்லியடி ம ம வி, என் சிவகுமார் ஹாட்லிக்கல்லூரி பருத்தித்துறை.

அதிமேற்பிரிவு: எஸ் கிருஷ்ணமூர்த்தி சிதம்பராக் கல்லூரி, எம் சிவகுருநாதன் நெல்லியடி ம ம வி.

ஆங்கிலப் பேச்சுப்போட்டி (பெண்கள்) கீழ்ப்பிரிவு: எஸ் மங்களகுமாரி மெதடிஸ்த மகளிர் கல்லூரி, கே சோபினி மெதடிஸ்த மகளிர் கல்லூரி, எஸ் செல்வஞானசோதி மெதடிஸ்த மகளிர் கல்லூரி.

மத்திய பிரிவு: ரி றஞ்சினி உடுப்பிட்டி மகளிர் கல்லூரி ஏ மேரி உடுப்பிட்டி மகளிர் கல்லூரி எஸ் செல்வக்குமாரி மெதடிஸ்த மகளிர் துக்கல்லூரி, கே சிவராசா நெ ம ம வி.

மத்திய பிரிவு: எம் ஈஸ்வரகுமார் நெல்லியடி ம ம வி, பி பாலராஜன் நெல்லியடி ம ம வி.

மேற்பிரிவு: வி சுந்தரராஜன் நெல்லியடி ம ம வி, எம் ஸ்ரீ பரமநாதன் நெல்லியடி ம ம வி, ரி கலாமணி நெல்லியடி ம ம வி.

அதிமேற்பிரிவு: எஸ் சிவனருள்சுந்தரம் சிதம்பராக் கல்லூரி வல்வெட்டித்துறை

— —

## கடும் உத்தரவு

விஸ்வமடு, வியாழன் விஸ்வமடு விவசாயமுகாமில் சமீபத்தில் ஏற்பட்ட தீவிபத்தை தொடர்ந்து முகாம் பொறுப்பதிகாரி திரு. என். விஸ்வநாதன் விவசாயப் படையினருக்கு கடும்உத்தரவு பிறப்பித்துள்ளார்.

வீரர்களை எவருடனும்கூட்டம் கூடி கதைக்கவேண்டாமென்றும் அப்படிக் கதைப்பது கண்டால் கடும் நடவடிக்கை எடுப்பது என்றும், எந்தவீரரும் முகாமுக்குள் இருந்து இரவு 6 மணிக்குக் பிறகு வெளியில் செல்லக்கூடாதெனவும் தன்னுடைய உத்தியோகத்தர்களை எந்த வீரரும் அவதூருக பேசியது கண்டால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவித்துள்ளார்.

— —

## ப. நோ. கூ. ச. வெள்ளி விழா

சங்கானை, வியாழன் சங்கானை கிழக்கு மத்திய ப. நோ. கூ. சங்க வெள்ளி விழாஇம்மாதம் 28,29,30ம் திகதிகளில் கொண்டாடப்படவிருக்கிறது.

மூன்றுநாட்கள் தொடர்ந்து நடத்தப்படும் இவ்விழாவில் கமத்தொழில் கண்காட்சி, கூட்டுறவுபற்றிய கருத்தரங்கு, விளையாட்டுப் போட்டிகள் கலைநிகழ்ச்சிகள் ஆகியன இடம் பெறும். இதற்கான வேலைகளைவிழாத் தலைவர் திரு. இரத்தினசாமி மேற்கொண்டுள்ளார்.

— —

## 'கலா' இறுதி ஆட்டம்

யாழ்ப்பாணம், வெள்ளி யாழ்ப்பாணம் வை. எம். சி ஏ. மண்டபத்தில் நடைபெற்று வரும், விளையாட்டு விழாவின், ''கலா இறுதி ஆட்டம்'' நாளை நடைபெறவிருக்கிறது.

இந்த இறுதி ஆட்டத்தில் யாழ். அரசாங்க அதிபர் திரு. பிரான்ஸிஸ் பீட்டர்ஸும் அவரது பாரியாரும் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்கள். (தே. நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவாக்கு

எப்பொழுது நாம் உண்மை வழியில் பிழைப்பைச் சம்பாதித்துக்கொள்ள வேண்டும் என எண்ணுகிறோமோ அப்பொழுதே மனிதர்களாக உயர்ந்து விடுவோம் — விநோபாவே.


# ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: "EELANADU" Jaffna.
Post Box: 49, Jaffna Telephone: 389,

யாழ்ப்பாணம் சௌமிய வருஷம் மாசிமாதம்
23-ந் திகதி (6-3-70)


## "சிவனுண்டு, பயமில்லை"

இன்று மகாசிவராத்திரி. தெற்கே கதிர்காமம் முதல் வடக்கே கைலாசம் வரையில் சைவ உலகமனைத்துக்கும் இன்று புனித நாளாகும். இன்று இரவு பகல் உண்ணுமலும் உறங்காமலும், சிவசிந்தனையாகவே விரதம் கிடந்து சில புண்ணியங்களைச் செய்து சிவனருள் பெற்று புனிதமடையவேண்டுமென்பதே சைவமக்கள் அனைவருக்கும் விதிக்கப்பட்ட விதியாகும்.

விரதங்களிலிருப்பதால் உண்மையில் பயனுண்டா? உண்ணுமலும் உறங்காமலுமிருந்து, நான்கு சாமபூசைகளையும் கண்விழித்து தரிசிப்பதால் என்ன நன்மை என்று சைவர்களில் பலருக்கும் சிறப்பாக இளைஞர்களுக்கும் சந்தேகம் எழக்கூடும். உண்ணுவதும் உறங்குவதும்தான் இன்ப வாழ்க்கை என்று, தவருக நினைத்துக் கொண்டிருப்பவர்கள் இந்த விரதங்களை பின்பற்றமாட்டார்கள். இரவு உறக்கமில்லாமல் விரதமிருப்பதாக நினைத்துக் கொண்டு தகாத வழிகளில் கண்விழித்து தங்களைத் தாங்களே ஏமாற்றிக்கொள்பவர்களும் உண்டு.

சைவமக்களுக்குப் பலவித குறைகளும் சங்கடங்களும் இன்று இருப்பதாயின் அதற்குக் காரணம் அவர்கள் தங்கள் பெரியோர்கள் காட்டியவழியில் நடவாமல் இருப்பதுதான். சிவம் என்ருல் அன்பு. சிவசம்பந்தம் அதாவது அன்புடன் வாழ்க்கை நடத்துவதே சைவம். சுயநலம் எங்கு முடிகிறதோ அங்குதான் அன்பு உதயமாகிறதென்பர். நமக்கு அன்பு உள்ளதாகவே நம்மில் பலரும் நினைத்துக்கொண்டிருக்கிறோம். ஆனல் உண்மையில் நமக்குப் பூரண அன்புண்டா? நமது பகைவர்கள் உள்ளிட்டு எல்லா உயிர்கள் மீதும் நமக்கு அன்பு இருக்கிறதா என்று நம்மை நாமே சற்று அத்மசோதனை செய்துகொண்டால் உண்மை நமது துன்பங்களுக்கெல்லாம் உண்மையான காரணமாகும். உண்மை அன்பு யாரிடம்உள்ளதோ அங்குதான் இறைவனுமிருப்பார். அன்பும் சிவமும் இரண்டல்லவென்பது ஆன்ருேர் வாக்கு. இதைப்பற்றி பேசலாம் எழுதலாம். ஆனல் நமக்கு உண்மை அன்பு வளருவதெப்படி? இது தான் கேள்வி. நாம் வருடத்தில் ஒரு நாளாயினும் உண்ணுமலும் உறங்காமலும் இருந்து, சுயநலமற்று, இறைவன் நினைப்பாகவே இருப்பதால், நமக்குள் அன்பு ஊறி இறை அருளும் கிடைக்க வழிபிறக்கலாமென்ற இவ் விரதங்களை வைத்துள்ளனர். அன்பில்தான் உண்மை இன்பம் இருக்கிறதென்பதை உணர்ந்தவர்கள் சுயநல வாழ்வு வாழமாட்டார்கள்.

"சிவனுண்டு, பயமில்லை" என்ருர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலரவர்கள். அதாவது அன்பிருப்பின் பயமில்லை என்பதே பொருளாகும். நாம் சுயநலத்துடன் இல்லாமலிருப்பின், பிறருக்காகவே வாழ்வதாயின் நமக்கு பயமேது? ஆகவே இவ்வித விரதங்களின் உண்மை நோக்கம் நமது சுயநல வாழ்வைத் திருத்துவதுதான். நமக்குள்ளே இருக்கும் தெய்வமே, எல்லா உயிர்களிலும் இருக்கிறதென்பதை மறவாமல் இருந்தாலே, நமக்குப் பகைவர்களிடமும் வெறுப்பின்றி அன்பு ஏற்படமுடியும். பகைவர்களும் நண்பர்களாகிவிடுவர். நமது பிரச்னைகளெல்லாம் பரிதியைக் கண்ட பனிபோல் மறைந்து விடும். 'யாதும் ஊரே யாவரும் கேளிர் என்ற உணச்சியும் நமக்கு ஏற்பட முடியும்.

இவ்வித புனித நோக்கத்துடனே மகாசிவராத்திரி முதலிய விரதங்களை அனுஷ்டிப்பதாயின், இன்பமே எந்நாளும் துன்பமில்லாத வாழ்வு வாழலாமல்லவா? நமது இன்னல்



## இறைவன் அருளால் நிறைவுகாணும் இரவு

# எண்ணுவார் நெஞ்சில் நண்ணுவான் ஈசன்

### இறைவனைப் பற்றி அப்பரடிகள் தத்துவம்:-

"முன்னம் அவனுடை
நாமம் கேட்டாள்
மூர்த்தி அவனிருக்கும்
வண்ணம் கேட்டாள்
பின்னை அவனுடைய
ஆரூர் கேட்டாள்
பெயர்த்தும் அவனுக்கே
பிச்சி யானாள்
அன்னையையும்
அத்தனையும்
அன்றே நீத்தாள்
அகன்ருள் அகலிடத்தார்
ஆசாரத்தை
தன்னை மறந்தாள்
தன்நாமம் கெட்டாள்
தலைப்பட்டாள் நங்கை
தலைவன் தாளே".

நாவுக்கரசரின் நாவில் ஒழுகிய தேவாரத் தேனிலே "இறைவனை அறிந்த ஜீவாத்மா உலக ஆசாபாசத்தை நீக்கி இறைவனின் பாதாரவிந்தத்திலே தலைப்படுகின்றது" என்னும் கருத்துப் பொதிந்துள்ளது. உலகில் பிறக்கின்ற ஜீவன்கள் யாவும் இறைவனின் அருட்கடலிலே இரண்டறஐக்கியப் படுகின்ற பக்குவநிலை இன்றைய அவசர யுகத்திலே அல்லற்படுகின்ற மனிதனுக்கு இருக்கின்றதா? இல்லை; என்றுதான் கூறவேண்டும். ஆனல்தான் வாழுகின்ற முட்டுற்ற வாழ்வினூடே கட்டற்ற அருள்வடிவான இறைவனை எண்ணுகின்ற பண்புதேவை. யாவும் வாழ்க்கையோடு முடிந்து விடக்கூடாது. உடலுக்காக ஓம்பும் கடமையைவிட ஆன்மாவின் உயர்வுக்கு நாம் உதவ வேண்டும்.

— இ. நாகராஜன் —

பிரார்த்தனைபற்றி மகாத்மா காந்திஜீ கூறுகையில் "உடலை வளர்ப்பதற்கு உணவு எவ்வளவு அவசியமோ, அந்த அளவுக்கு ஆன்மாவை வளர்க்கப் பிரார்த்தனை அவசியம்" என்கிருர். பிரார்த்தனை ஒன்றே நமது ஆத்மாவுக்கு

### மனிதனல் முடியாத ஒன்று உண்டு அது எது?


சந்திரனை அடையலாம் சூரியனையும் தோல்விகாணச் செய்யலாம். இதே போன்ற பல சாதனைகளையெல்லாம் யாம் புரியலாம் ஆனல் சும்மா இருக்கின்ற திறனறியேன் என்கின்ருர் ஒருஇறை பக்தன். சிந்தையை அடக்கி ஒரு நிலைப்படுத்த மனிதனல் முடிகிறதா? இந்தத்திறமை இல்லையே. இதனை விடுவிப்பதற்கு மனிதன் தன்னை வெகுவான பாடுகளுக்குள்ளாக்க வேண்டுமென்பதில்லை. இறைவனை நினைக்கின்ற இதயமுள்ளவன் நிசசயம் அனுபவிக்கின்ற தேவையிருப்பினும் முக்கியமானவற்றுள் முன்னணியிலுள்ள விரதநாட்கள தனித்துவமுடையன் சிலவாகும்

### மகாசிவராத்திரி என்பது பேரின்பஇரவு

சிவராததிரி என்பது சிவனைப் பற்றிச் சிந்திக்கவாய்ப்பான ஒரு தினம். சிவம் என்பதன் பொருளுக்கு இன்பம் என்ற கருத்துமுண்டு. இராத்திரி என்பது இரவு என்பதாகும் எனவே இந்த இரவு பேரின்ப இரவாகும்.

இந்த இன்பம் வெறுமையான உலகாயுத இன்பம் அல்ல நிறைவான நெஞ்சத்தைப் பெற அமை

## இதுதான் கேதீஸ்வரன்பதி



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

### இன்றைய நாம் கைக்கொள்வதுஎன்ன

கடவுளை எண்ணுவதற்காக நாம் கொள்ளவேண்டிய இந்நாளை நித்திரை விழிக்கின்ற நாளாகக் கருதுகின்றனர் சிலர். வெறுமனே நித்திரை விழித்தால் அது பயனுடையதாகுமா? இல்லை இந்நாள் உண்மையை உணருவதற்குரிய நாள.

இறைவனை ஆரா அன்புடன் பூஜிக்க வகுத்த பொன் நாள். மகாத்மாஜி முன் கூறியதுபோல் இதயமொன்றிய பிரார்த்தனைக்காக ஒதுக்கவேண்டிய நாள்

'புழுவாய்ப் பிறக்கினும்
புண்ணியா
நின்னடி என்மனத்தே
வழுவாதிருக்க வரந்தர
வேண்டுமிவ் வையகத்தே'

என்னும் ஒப்பற்ற பக்தியைப் பெறுவதற்கு வழி வகுக்கவில்லையானல் அதனல் பயனிருக்க முடியாது. அறமும் அன்பும் ஒன்ருேடொன்று பின்னிப்பிணைந்து நம்முள் ஒளிரவேண்டும், அந்தச் சிறந்த வாழ்வுதான் உய்வுண்டாக்கும். எனவே முதலில் ஆன்மீகத்தை நம்பவேண்டும். காலப் புதுமைகளுக்கு அப்பால் நாம் செல்லவேண்டும். உலகத்துடன் ஒன்றி நிற்கின்ற உலகியல் அறிவு மட்டும் நமக்கு உயிரூட்டமாகாது உண்மையைப் பேணவேண்டும். வாழ்வு ஒழுக்கத்துடன் இரண்டறக் கலக்கவேண்டும்.

ஒழுக்கம் விழுப்பம் தர
லான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப்படும்

என்கிருன் வள்ளுவன்.

கற்றதனல் ஆயபயனென்
கொல் வாலறிவன்
நற்ருள் தொழாரெனின்

என்கிற குறளை மிக அறிவுத் தெளிவுடன் சிந்திக்கவேண்டும். பிறவிப் பெருங்கடலை நீந்தவும், மானசீகமான அன்பை நிலைக்கப்பண்ணவும், இறைவனை நினைக்கவும் சமுதாயம் முன்வரவேண்டும். நமது பண்டைய மக்கள் சிந்தனைத் தெளிவோடு வகுத்த விரதங்களைக் காலத்தின்



## ஜெயமாறன் எழுதுவது:-

தமிழ்நாட்டிலே இந்து ஆலயங்களில் இந்துக்களல்லாதவர்களும் சென்று வழிபடலாமென்று தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது.

புகழ்பெற்ற ராமேச்வரம் கோவிலிலே ஒரு குறிப்பிட்ட இடத்துக்கப்பால் இந்துக்களல்லாதார் செல்லப்படாதென்று பலகையில் எழுதியிருந்தனர். அந்தப் பலகையை இப்போது காணவில்லையாம். இதை அரசாங்கமே அகற்றச் செய்ததா? என்று ஓர் அங்கத்தவர், சென்னை மேல்சபையில்கேட்டதற்கு, முதலமைச்சர் திரு. கருணநிதி 'கடவுள் முன்பாக எல்லோருமே சமம்' என்ற நம்பிக்கை காரணமாக மக்களே அப்பலகையை அகற்றியிருக்கக் கூடும் என்று பதிலளித்தார்.

கோவில்களில் அவ்வித தடைகள் ஏற்படுத்துவதில், அரசாங்கத்துக்கு நம்பிக்கை இல்லையென்றும் இவ்வித தடைகளை நீக்குவதில் மக்களின் ஒத்துழைப்பை வேண்டுவதாகவும் மற்ருெரு கேள்விக்குப் பதிலளிக்கையில் தெரிவித்தார்.

தமிழ்நாடு ஆலயப் பிரவேச அனுமதிச் சட்டத்திலே 'இந்துக்களல்லாதவர் கோவிலுக்கு உள்ளேயோ வெளியேயோ வழிபாடு செய்யப்படாது என்றுள்ள விதியை நீக்கிவிடுமாறு அரசாங்கம் உத்தரவிட்டுள்ளதாக இந்து தர்மபரிபாலன அமைச்சர் கே. வி. சுப்பையா சென்ற திங்களன்று அதேசபையில் தெரிவித்ததாக சென்னைப் பத்திரிகைகளில் செய்திகள் வெளியாகியுள்ளன.

0 0 0

இந்துக்கள் யார், அல்லாதவர்கள் யார் என்று இக்காலத்தில் அடையாளம் கண்டு கொள்ள முடியாது. இதுவரை மேற்குறித்த தடைகள் இருந்திருப்பினும் இந்துக்களல்லாதாரும் மதுரை, ராமேச்வரம் முதலிய கோவில்களுக்குள்ளும் சென்று தரிசித்து வழிபாடு செய்து வந்திருப்பது பகிரங்க ரகசியம்.

சிதம்பரத்திலே ஸ்ரீ நடராஜாவின் புனித சந்நிதியில் அந்த மேடைக்கு மேலே பல வெள்ளைக்காரர்களும் இந்துக்களல்லாதவர்களும் ஏறி சரிசமமாக தரிசித்ததை உலகத் தமிழ் ஆராய்ச்சி சுற்றுலாவின் போது கண்டேன். அங்கு செல்ல சட்டையைக் கழற்ற மட்டும் கேட்கின்றனர்.

இலங்கையிலே பாடல் பெற்ற ஸ்தலமான திருக்கேதீச்சரத்தில் மகாமண்டபத்திலிருந்து மற்ற சமயத்தவரும் அர்ச்சனை செய்விக்கச் சொல்லி வழிபடுவதை இன்றும் காணலாம்.

இநதுக்களல்லவென்பது அவர்களது பெயர்களிலிருந்தே தெரிந்தாலும் குருக்கள்மார்கள் எவ்வித ஆட்சேபமும் கூருமல் அர்ச்சனை செய்கின்றனர்.

நல்லூர் கந்தசுவாமி கோவலில் தரிசிக்க யாருக்கும் தடையில்லை. முன் இங்கு அரசாங்க அதிபராக இருந்த பௌத்தரான ஜயவீரா, சட்டையைக் கழற்றிவிட்டு, பயபக்தியுடன் உள்ளே சென்று சகஸ்ரநாம அர்ச்சனையைச் செய்வித்து விபூதி, சந்தன பிரசாதங்களை வாங்கி நெற்றியில் இட்டுக் கொண்டார்.

பௌத்த சிங்களவரான பிரதமர் டட்லி சேனநாயக்கா, அவரது தகப்பனரின் சிரார்த்த தினத்தன்று கொழும்பு ஜிந்துப்பிட்டி எனும ஜயந்திநகர் முருகன் கோவிலில் நடைபெற்ற விசேஷ வழிபாட்டில் கலந்து, மகாமண்டபத்தில் ஒரு மணிநேரத்துக்கு மேல் நின்று பக்தியுடன் வணங்கியதைக் கண்டேன்.

இதெல்லாம் ஏன் கூறுகிறேன் என்ருல் இந்துக்களல்லாதார்களும் ஏற்கனவே தடையின்றி பல கோவில்களிலும் வழிபடுகிருர்கள் என்பதைக் காட்டத்தான். அவர்கள் எல்லாரும் நம் கோவில்களுக்கு வரக்கூடாதென்று இனிக் கூற முடியுமா? அதனல் ஏதும் நன்மையுண்டா?

0 0 0

நாட்டில் ஒற்றுமை ஏற்பட வேண்டுமென்ருல் அது 2-ம் கலம் பார்க்க

ஞல் சோதனைகளும், வேதனைகளும் மருவாத செவ்விய இதயமுண்டாகும். அதனல் நிரந்தர அமைதி பூக்கும். மகாசிவராத்திரியின் மகத்துவமே இறைவனை பிரார்த்திப்பது இறைவனுல்


## வெஸ்லி சினிமா

மானிப்பாய்
தினசரி: 6-30, 10-00
ஏரிபோயா, போயா 2-30 மணி
இன்று நள்ளிரவு 1-30 க்கு

றேம். ஆனுல் உண்மை யில் நமக்குப் பூரண அன் புண்டா? நமது பகைவர் கள் உள்ளிட்டு எல்லா உயிர் கள் மீதும் நமக்கு அன்பு இருக்கிறதா என்று நம்மை நாமே சற்று அத்மசோதனை செய்துகொண்டால் உண்மை விளங்கும்.

நம்மிடம் பூரண அன்பு இல்லாமலிருப்பதுதான் முடியும்.

இவ்வித புனித நோக்கத்துடனே மகாசிவராத்திரி முதலிய விரதங்களை அனுஷ்டிப்பதாயின், இன்பமே எந்நாளும் துன்பமில்லாத வாழ்வு வாழலாமல்லவா? நமது இன்னல்களெல்லாம் தீரவும் அப்போதுதான் வழிபிறக்கும்.

# சிவராத்திரி விழா

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

## ஆசிரியகலாசாலையில்

அராலி, வெள்ளி

பலாலி அரசினர் ஆசிரிய கலாசாலை மாணவர் மன்றத்தாரால் மகா சிவராத்திரிவிழா இனிது கலாசாலை மண்டபத்தில் கொண்டாடப்படும்.

பண்டிதர்கள் க, சச்சிதானந்தம், எஸ்.பொன்னம்பலம் ஆகியோரின் சொற்பொழிவுகளும் இன்னிசைக் கச்சேரியும் இடம்பெறும்.

0 0 0

## கோப்பாயில்

கோப்பாய், வெள்ளி

நீர்வேலி அரசகேசரிப் பிள்ளையார் கோவிலில் இன்று மகா சிவராத்திரி விழா கொண்டாடப்படுகின்றது.

இரவு நிகழ்ச்சிகளில்வித்துவான் திரு கே. சொக்கலிங்கம், ஆசிரியர் திரு எஸ், சபாரத்தினம், திருமதி வேதவல்லி கந்தையா, ஆசிரியர் திரு எஸ். தாமோதரம்பிள்ளை ஆகியோரது சொற்பொழிவுகளும் செல்விகள் எஸ். செந்தூர்ச்செல்வி எஸ் ரஞ்சனிதேவி ஆகியோரது இன்னிசைக் கச்சேரியும், செல்வி ஜகதா சாம்பசிவக் குருக்களின் கதாப்பிரசங்கமும் நீர்வேலிவில்லிசைக்குழுவினரின் வில்லிசைப் பாடல்களும் இடம்பெறும்.

0 0 0

## சைக்கிளில் யாத்திரை

கைதடி, வியாழன்

கைதடி மகா வித்தியாலய உப அதிபரான திரு பீ எஸ். ஜயவீரசிங்கம் தலைமையில் கைதடி மகாவித்தியாலய மாணவர்களும் பழைய மாணவர்களைக் கொண்ட 50க்கு மேற்பட்ட கோஷ்டியொன்று மகா சிவராத்திரியன்று காலை கைதடியிலிருந்து சைக்கிளில் புறப்பட்டு திருக்கேதீச்சரத்தை அடையவிருக்கின்றது.

## சிவனொளிபாத மலைக்கு

வெள்ளவத்தை, வெள்ளி

மகா சிவராத்திரியை முன்னிட்டு இலங்கை தபாற் தந்திப் போக்குவரத்து திணைகள ஊழியர்கள் கோஷ்டியொன்று சிவனொளிபாத மலைக்கு யாத்திரை சென்றுள்ளது. தமிழ் ஊழியர்களின் கோஷ்டிக்கு திருநெல்லை க. பேரன் தலைமை வகித்துச் சென்றுள்ளார்.

லக்சபான மின் நீர்வீழ்ச்சி புதிய ஹட்டன் நகர் ஆகியவற்றுக்கும் கண்டி தலாதா மாளிகாவுக்கும் வரக்காப்பொலையிலுள்ள புதிய மின் கைத்தறி நிலையத்துக்கும் இக் கோஷ்டியினர் விஜயம் செய்யவுள்ளனர்.

0 0 0

8-ம் கலத் தொடர்ச்சி

கோவில்கள் மூலமும் தெய்வத்தின் வாயிலாகவும்தான் முடியும், அங்கு எல்லாரும் சென்று பக்தியுடன் வழிபடுவதாயின், அந்தத் தெய்வ சக்தியின் மூலமாக மக்கள் மனதிலே ஒற்றுமை ஏற்பட வழிபிறக்கலாம். இதைவிட்டால் சமூக ஒற்றுமைக்கு வேறு நல்ல வழி என்ன?

0 0 0

உருவமும் உயிருமாகி
ஒதிய உலகுக்கெல்லாம்,
பெருவினை பிறப்புவீடாய்,
நின்றவெம் பெருமான்
மிக்க, அருவிபொன் சொரியு
மண்ணாமலையுளாய் அண்
டர் கோவே, மருவி நின்
பாதமல்லான் மற்றொரு
மாடிலேனே.

அப்பர் அடிகள்

## விற்பனைக்கு

Vauxhall Wyvern E L 651[9] சிறந்த நிலையில் விற்பனைக்குண்டு. நாளை போயாதினம் பார்வையிடலாம். 71, 4-ம் குறுக்கு வீதி, யாழ்ப்பாணம். 1907

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரா யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1970-ம் ஆண்டு மார்ச்மாதம் 6-ம்திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

த்மா காந்திஜீ கூறுகையில் ''உடலை வளர்ப்பதற்கு உணவு எவ்வளவு அவசியமோ, அந்த அளவுக்கு ஆன்மாவை வளர்ககப் பிரார்த்தனை அவசியம்'' என்கிறார். பிரார்த்தனை ஒன்றே நமது ஆத்மாவுக்கு நாம் வழங்கும் உண்டியாகும். இந்த உண்டி ஆன்மாவை உறுதிப் படுத்துகின்றன.

## இன்றைய உலகின் ஆன்மீகம்:

அறிவுகொண்டு தன்னுடைய சொந்தவாழ்வுக்கா ச மனிதன் சாதித்துளள சாதனைகள் பலவாகவுள்ளன சுய தேவையை வளர்க்கவும், சுய கௌரவத்தை உயர்த்தவும் அறிவு விரிந்து விஞ்ஞானமாகப் பரிணமித்தது வெறுமனே வைத்துக் கொண்டு மேனுடுகள் முன்னேக்கிச் செல்லுகின்றன. புறவிழிகள் காணும் உண்மை இது. அணுவாயிதங்களின் வளர்ச்சியைக்கண்டு மனிதனின் சாதனையை அளவிடும் காலமிது. சந்திர மண்டலத்தில் தன் காற் சுவடுகளைப் பதித்துவிட்டு வெற்றிப்பிருமிதத்துடன் மனிதன் திரும்பிய யுகம் இந்த யுகந்தான். இந்தச் சாதனையால் மனிதன் பெருமை அடைகின்றுன். வரவேற்பதோடு சந்திரமண்டலத்துக்கு அப்பாலும் மனிதன் சென்று வெற்றி கானட்டும். அது மனிதனின் அதீத முயற்சியினுல் வெற்றிதானே. நாளை உலகாயுத வாழ்வுக்குத் தேவையாகலாம்.

## அறிவித்தல்


### மின் விநியோகத்தடை

இலங்கை மின்சார சபைப் பகுதியினரால் அத்தியாவசிய திருத்தங்கள் செய்ய விருப்பதால் 1970ம் ஆண்டு பங்குனி மாதம் 7-ந் திகதி காலை 8 மணி தொடக்கம் காலை 10 மணி வரையும் யாழ். மாநகர சபை எல்லைக்குள் மின்சார விநியோகம் தடைப்படுமென்பதையும்,

2. யாழ். மாநகரசபை மின்சாரப் பகுதியினரால் சில அத்தியாவசிய வேலைகள் செய்ய வேண்டியிருப்பதால் ''கொண்வென்ற்'' உப மின் நிலையத்துடன் தொடர்புள்ள மின் இணைப்புப் பாதையில் 8-3-70-ம் திகதி காலை 8 மணி தொடக்கம் நண்பகல் 12 மணி வரை மின்சார விநியோகம் தடைப்படுமென்பதையும் சகல மின் பாவனையாளர்களுக்கு அறியத்தரப்படுகிறது

ஏ. ரி. சுந்தரம்
மாநகரசபை ஆணையாளர்
யாழ்ப்பாணம்

மாநகரசபை அலுவலகம்,
யாழ்ப்பாணம், 5-3-70
1982



பாடல் பெற்ற ஸ்தலமான கூருகம்கேதீஸ்வரத்தில் மகா சிவராத்திரி விழா மிகச் சிறப்பாக இன்று நடைபெறுகிறது. நாட்டின் பல பாகங்களிலிருந்து மட்டுமல்லாமல் தமிழ் நாட்டிலிருந்தும் யாத்திரிகர்கள் இன்று இங்கு வந்துள்ளனர் இரவுபூராவும் இடைவிடாமல் நான்கு சாமமும் இன்று இங்கு பூசைகள் நடைபெறும்

சிவர த்திரியை முன்னிட்டு கேதீஸ்வர யாத்திரிகர்களுக்கு அரசாங்கம் விசேஷ போக்குவரத்து வசதிகளும் கட்டண சலுகைகளும் அளித்துள்ளது குறிப்பிடத்தக்கது:

திருப்பணிச் சபையினரும், மடாலயப் பொறுப்பாளர்களும் யாத்திரிகர்களுக்கான எல்லாவிதமான வசதிகளையும் ஒழுங்குசெய்துள்ளனர்.

அதனையே அடைவான். மணிவாக்குகளை திருவாசகம் என்னும் தேனை அள்ளித்தந்த மாணிக்கவாசகப் பெருமான்; 'அவனருளாலே அவன்றுள் வணங்கி' என்கின்றுர் இறைவனை ஒன்றுகின்ற உள்ளத்துக்கு அவன் அருள் அவசியம் வேண்டும். 'நிலைபெறுமாறெண்ணுதியே. நெஞ்சே நீவா நித்தமும் எம் பிரானுடைய கோயில் புக்கு' என்று அப்பரடிகள் வேண்டுகின்றுர். தன்னுடைய இதயத்தை இறைவனுக்கு அர்ப்பணிக்கின்ற திறமை எங்குண்டோ அங்குதான் அமைதி மலரும்.

### கீழ்நாட்டுத் தத்துவமே இறைவன் கீர்த்தியை பாடுவதாகும்

ஆத்மீகப்பற்றும் அறவழியும் இணைந்த வாழ்க்கையைநம்புபவர்கள்கீழைத்தேச மக்கள் என்பது இன்றைய உலகில் மேனுட்டவர்களுமே ஒப்புக்கொண்ட உண்மை. அதிலும் அகன்ற பாரதமும் பாரதத்துடன் இணைந்துள்ள இந்து சமயத்தை மேற்கொள்ளுகின்ற நாடுகளும் ஆத்மீகத்துக்கும் முன்னிடம் கொடுப்பனவாகும்.

''அகரமுதல எழுத்தெல்
லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு.''

என்கின்றுர் வள்ளுவர், வையத்துத்துள் வாழ்வாங்கு வாழ்கின்ற வாழ்க்கைக்கு முன்னேடியாக உள்ளது இறைவனின் நினைவாகும். இறைவனை நினைக்கின்ற பாரம்பரியப் பண்பாடு நமக்கு இன்றுநேற்று ஏற்பட்டதல்ல. உலகாயுத வாழ்க்கையுடன் ஒன்றி நின்றுலும் பலமான பக்தியே நம்மை அமைதிப்படுத்தும் என்ற கோட்பாட்டில் முன்னேயோரால் நிர்ணயிக்கப் பட்டவையே விரதநாட்களாகும்.

இந்துசமயத்தினர் மேற்கொள்ளவேண்டிய விரதத் தினங்கள பலவுள்ளன. காலம் முழுவதும் விரதம் நிறைந்த நிறைந்த இரவாகும். சிவனுக்குரிய சிறப்பான அம்சங்கள் நிறைந்துள்ள இந்த இரவு சிவத்தினுள் ஆன்மா பெருஞ்சுகம் பெற வழிகாட்டுகின்றது-

### சிவராத்திரித் தத்துவத்துக்கு ஒரு கதை

காட்டில் வேங்கையால் துரத்தப்பட்ட ஒரு வேடன் ஒரு மரத்தின்மீது தாவி ஏறுகிறுன். வேங்கை வேடன் ஏறிய மரத்தின் கீழேயே படுத்துக்கொள்கின்றது, வேடன் நித்திரை செய்தால் தவறிக் கீழே விழுந்துவிடவேண்டி நேருமென்ற அச்சத்தினுல் மரத்திலுள்ள இலைகளைப் பறித்துக் கீழே போடுகிறுன் அந்த இலைகள் மரத்தினடியிலே அமைந்துள்ள சிவலிங்கத்துக்கு அர்ச்சிப்பதாக அமைகிறது. அறிவற்ற வேடன் அறியாமலே விழித்திருந்து இறைவனை அர்ச்சித்த அந்த நாள் சிவராத்திரி. எனவே வேங்கையின் பயத்தால் விழித்த அவன் சாயுச்சியப்பேறு பெறுகின்றுன்.

இதனை வெறுங்கதை என தள்ளிவிடக்கூடாது. ஒருவன் எக்காரணத்திலுைம் இறைவனை நெருங்குகின்றபோது அவனுக்குப் பயனுண்டு என்ற கருத்தையே புலப்படுத்துவதாக அமைகிறது.

இன்றைய வாழ்க்கையில் மனிதன் நின்று நிதானமாக இயங்கமுடிவதில்லை. எதையெதையோ சாதிக்க அவன் எங்கோ செலவேண்டியிருக்கிறது. ஆனுலும் நமக்கென்று அமைந்த நல்ல தினங்களிலாவது இறைவனை நினைக்கவேண்டும். அதற்காகவே விரத நாட்களை முன்னையோர் நிர்ணயித்தனர். இந்த நிர்ணயித்த நாட்களுள் முதன்மையான நாள் சிவராத்திரி என்னும் நன்னுள்.

நிந்தவும், மானசீகமான அன்பை நிலைக்கப்பண்ணவும், இறைவனை நினைக்கவும் சமுதாயம் முன்வரவேண்டும். நமது பண்டைய மக்கள் சிந்தனைத் தெளிவோடு வகுத்த விரதங்களைக் காலத்தின் கோலத்துக் குட்படுத்தாமல் கட்டுப்பாட்டுடனும் பண்புடனும் போற்றக்கூடிய நிலை உருவாகவேண்டும். நாம் நினைக்கின்றவற்றையெல்லாம் தானே நிறைவுறத்தருகின்ற இறைவனைப் போலித்தனமான கேளிக்கைகளைக் கொள்ளுவதனுல் மறந்துவிடக்கூடாது.

நின்றும் கிடந்தும் இருந்தும் என்றும் அவன்தாள் நினை என்னும் கருத்து நமது சமூகத்துக்கு நிலைத்துநிற்குமானுல் சோதனைகளும், வேதனைகளும் மருவாத செவ்விய இதயமுண்டாகும். அதனுல் நிரந்தர அமைதி பூக்கும். மகாசிவராத்திரியின் மகத்துவமே இறைவனை பிரார்த்திப்பது இறைவனுள் எண்ணுவதெல்லாவற்றையும் நண்ணச்செய்வதாகும்.

எண்ணுக! உளமே எம்மை
இங்குமுன் படைத்த
கோவைத்
திண்ணமாய் ஒழுக்கத்
தோடு
திறன்மிகக் கடமை யாற்
றின்
நண்ணுவன் ஈசன் நம்முள்
நலம்பல ஆகும் நாட்டில்
வண்ணமும் ஓங்கும் மக்கள்
வளத்துடன் வாழ்வார்
நாளும்:

பட வேண்டுமென்றுல் அது 2-ம் கலம் பார்க்க

## வெஸ்லி சினிமா

மானிப்பாய்

தினசரி: 6-30, 10-00
பிரிபோயா, போயா 2-30மணி
இன்று நள்ளிரவு 1-30 க்கு
காட்சியுண்டு

எஸ்.எஸ்.ஆர். - விஜயகுமாரி
நடித்த

### பூம்புகார்

(புதிய கொப்பி)

10மணிகாட்சி மட்டும்
பெற்றுல்தான்பிள்ளையா
இத்துடன் சென்னையில்
நடைபெற்ற 2-வது அனைத்
துலக தமிழ் ஆராய்ச்சி
மகாநாடும் கலரில் கண்
பிக்கப்படும்

## நிறுத்துங்கள்!

# குப்ருவிற்



பாவித்து,
பயிர்களையும்
வருவாயையும்
பாதிக்கும்
காளான்
நோய்களை
நிறுத்துங்கள்!

குப்ருவிற் — ஒரு பேயர் தயாரிப்பு. அது, காளான் புள்ளி, அழுகல், வாடல், பூஞ்சணம், பின்-முன் கூற்று நோய் அனைத்தையும் கட்டுப்படுத்தும். குப்ருவிற் சுலபமாக நீருடன் கலக்கும். குப்ருவிற் பாவிப்பது சிக்கனம். குப்ருவிற் நெடுங்காலம் பத்திரமாயிருக்கும். குப்ருவிற் நோய் தீர்க்கும் வன்மைக்குப் பெயர் பெற்றது. குப்ருவிற் சிறந்த நீர்மை, நிலைப்பு வன்மைகள் கொண்டது. குப்ருவிற் விரிவான பல செயற்றிறங்கள் வாய்ந்தது. குப்ருவிற் விரைவாயும் நீடித்து நின்றும் செயலாற்றுவது. கலப்படமற்ற குப்ருவிற் தேர்ந்தெடுங்கள். குப்ருவிற் — ஒரு பேயர் தயாரிப்பு. அது நம்பிக்கையான விஷயமறிந்த விநியோகஸ்தரிடம் கிடைக்கும். இலவச அறிவுரைச் சேவைக்கு எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள்.




பயிர்களைக் காத்துப் பண லாபம் பெறப்
பாவியுங்கள் — பேயர் விவசாய ரசாயனப்
பொருள்கள்.

உற்பத்தியாளர்:
பேயர்,
ஜெர்மனி.

இலங்கையில் விநியோகிப்போர்:
ஹேக்கெம் லிமிட்டெட்
400, டீன்ஸ் வீதி, கொழும்பு 10.

P.9199